
திருநாவுக்கரசர்

வாழ்வும் - வாக்கும்

- திருவரசு -



திருநாவுக்கரசர் வாழ்வும் வாக்கும்

திருவரசு

திருவரசு புத்தக நிலையம்
13, தீனதயாளு தெரு,
தி. நகர், சென்னை – 600 017

முதற் பதிப்பு : டிசம்பர், 1996

விலை : ரூ. 20.00

Laser Typeset at : LKM Computer Prints, Chennai – 17.
Printed at : Ravi Raja Offset, Madras – 14

முன்னுரை

பிறைசூடிய வரிசடை வித்தகனான கைலை நாதன் தம் பக்தர்களை ஆட்கொள்ளப் புரியும் திருவிளையாடல்கள் எண்ணிலடங்கா. தம் அடியார் களுக்காக ஈசன் எதையும் செய்வான் என்பதை சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுகள் மெய்ப்பிக்கின்றன.

சைவ சமயக் குரவர்கள் நால்வரில் ஒருவரான அப்பர், நாவுக்கரசர் என்று புகழப் பெற்றவர். வேளாள மரபில் செல்வக் குடியில் சிவபக்த குடும்பத்தில் பிறந்து 'மருள் நீக்கி' என்று பெயரோடு வளர்ந்தவர். விதி வசத்தினால் சமணராகி தருமசேனர் என்று பெயர் மாற்றம் செய்துகொண்டு வாழும் தம் பக்தனைத் தடுத்து ஆட்கொள்ளத் திருவுளம் கொண்டார் விடமுண்ட கண்டனான விமலன். வெப்பு நோயைக் கொடுத்துத் தம் காலடியில் வந்து விழச் செய்து 'கூற்றாயினவாறு விலக்கினீர்' என்று பதிகம் பாட வைத்து சைவனாக்கினார். நாவுக்கரசர் என்ற நாமத்தையும் அளித்தார். ஞானசம்பந்தப் பெருமானால் 'அப்பரே!' என்று அழைத்து அணைத்துக் கொள்ளப்பட்டார்.

சிவத்தலங்களில் உழவாரப் பணி செய்து சிவனை நினைந்து உருகி தேவாரப்பதிகங்கள் பாடி சிவத்தொண்டு புரிந்து பெரும்பேறு பெற்றவர் அப்பர் பெருமான். கைலாசபதியின் கருணைக்குப் பாத்திர மானவர்களால் அற்புதங்கள் நிகழ்த்த முடியும் என்பதற்கு நாவுக்கரசரின் வாழ்க்கை ஒரு சான்றாகும்.

சமணர்களோடு வாதிட்டு, 'மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும்' என்று பதிகம் பாடி சுண்ணாம்புக் காளவாயைப் பனிக்குகையாக்கியும், விஷங்கலந்த உணவை உண்டு ஏப்பம் விட்டு, மத யானையின் காலடியில் கலங்காமல் இருந்து, பாறையோடு பிணைத்துக் கடலில் தள்ளிய போதும் 'சொற்றுணை வேதியன் சோதிவானவன்' என்று ஈசனைத் துதித்துப்பாட, பாறைக்கல் பாய்மரக் கப்பலாகிக் கடலில் மிதக்கச் செய்தும், அற்புதங்கள் நிகழ்த்திய சிவனடியார். பாம்பு கடித்து இறந்த பாலகனைப் பதிகம்பாடி சிவனை வேண்டி உயிர்ப்பிக்கச் செய்தவர் நாவுக்கரசர்.

நாவுக்கரசரின் தேவாரத் திருப்பதிகங்களைப் படித்தால் நா இனிக்கும் கேட்டால் செவி இனிக்கும். கற்றால் சிந்தை களிக்கும் - இனிக்கும். அவலங்கள் நிறைந்த மனித வாழ்க்கையில் சகல சுகங்களையும் கொடுக்கக் கூடியது அப்பர் அடிகளின் தேவாரப் பாடல்கள்.

நிலையற்ற இவ்வுலகவாழ்வில் அர்த்தமுள்ள வாழ்வு வாழ அனைவரும், ஆறாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த நாவுக்கரசரின் வாழ்வையும், வாக்கையும் அறிய வேண்டும் என்ற அவாவுடன் இச்சிறு முயற்சியை மேற்கொண்டு இந்த பெரிய நூலை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றேன்.

உமையொருபாகனான உமாபதியின் திருவருள் உங்களுக்கும் கிடைக்கவேண்டும். என்பதற்காக அப்பர் பெருமானின் தேவாரங்களில் சிலவற்றை இந்நூலில் ஒரு பகுதியாக 'வாக்கு' என்ற தலைப்பில் அளித்துள்ளேன். அன்பர்கள் அப்பரின் பக்திப் பாசுரங்களைப் படித்துப் பயனுறுவார்களாக.

சென்னை–17 **திருவரசு**

திருநாவுக்கரசர் - வாழ்வு

உமாபதி சிவாச்சாரியார் அருளிச் செய்த
திருத்தொண்டர் புராண சாரப் பாடல்களில்
திருநாவுக்கரசு சுவாமிகளின் தோத்திரப் பாடல்.

திருச்சிற்றம்பலம்

போற்று திருவாமூரில் வேளாண் தொன்மைப்
பொருவில் கொறுக்கையர் அதிபர் புகழனார்
பால்
மாற்றரும் அன்பினில் திலகவதியாம் மாது
வந்து உதித்த பின்பு மருள் நீக்கியாரும்
தோற்றி அமண் சமயமுறும் துயரம் நீங்கத்
துணைவர் அருள் தரவந்த சூலை நோயால்
பாற்றரு நீள் இடர் எய்திப் பாடலிபுரத்தில்
பாழி யொழித்து அரண் அதிகைப் பதியில்
வந்தார்

வந்து தமக்கையர் அருளால் நீறு சாத்தி
வண் தமிழால் நோய் தீர்ந்து வாக்கின் மன்னாய்
வெந்த பொடி விடம்வேழம் வேலை நீந்தி
வியன் சூலம் கொடி யிடபம் விளங்கச் சாத்தி
அந்தமில் அப்பூதி மகன் அரவு மாற்றி
அருட் காசு பெற்று மறை அடைப்பு நீக்கிப்
புந்தி மகிழ்ந்து ஐயாற்றில் கயிலை கண்டு
பூம்புகலூர் அரன் பாதம் பொருந்தினாரே.

1

சைவம் தழைத்தோங்கி வளர்ந்த இடம் தென்னாடு. இதனாலேயே சைவக்குரவர்களுள் ஒருவரான மணிவாசகப் பெருமான் 'தென்னாடுடைய சிவனே போற்றி' என்று பாடினார். எந்நாட்டவருக்கும் இறைவனான சிவனை தென்னாட்டவருக்கே உரிமை யாக்கியது ஏன் என்றால், தென்னகத்தில் அதிலும் தமிழகத்தில் சிவம் பெருக்கும் ஆலயங்கள் எண்ணிலடங்காததாக விளங்கின. சிவபதியாகிய தமிழகத்திலே பல குறுமன்னர்கள் ஆண்டுவந்தார்கள். அந்த அரசர்களில் பலர் சிவனடியார்களாகவும் விளங்கினர். சைவநெறி பரப்பினர்.

தென்னகத்தின் தமிழகத்திலே-இன்றைய தென்னார்க்காடு மாவட்டம் **திருமுனைப்பாடி** நாட்டிலே, **திருவாமூர்** என்றொரு திருப்பதி. அவ்வூரிலே வேளாளக்குடியிலே செல்வந்தராக விளங்கினார் புகழனார் என்பவர். உழைப்பால் உயர்ந்தவர். தம் செல்வச்செழிப்பைப் பிறருக்கும் பகிர்ந்து கொடுத்து வாழ்ந்ததினால் புகழோடு விளங்கினார். திருமுனைப்பாடியில் புகழனாரை அறியாதவர் யாரும் இருக்கமுடியாது என்றபடிக்குச் செல்வாக்குப் பெற்றிருந்தார் இவரது துணைவியாரின் பெயர் **மாதினியார்.** அன்பும் பண்பும் கடவுள் பக்தியும் மிகக் கொண்டவர் அந்த அம்மையார். கருத்தொரு

மித்த இத் தம்பதியருக்கு இறைவன் இரு குழந்தை களைப் பரிசாக வழங்கினான். ஒரு பெண்–ஒரு ஆண். பெண் குழந்தைக்குத் **திலகவதி** என்றும் ஆண் மகவுக்கு **மருள்நீக்கி** என்றும் பெயரிட்டுப் பாசத்தோடு வளர்த்து வந்தனர்.

திலகவதி பிறந்து பல ஆண்டுகளுக்குப்பிறகே மருள்நீக்கி பிறந்ததினால் தன் குட்டித்தம்பியிடம் திலகவதி கொள்ளை அன்பு கொண்டிருந்தார். பெற்றோரைவிட உடன் பிறந்த தமக்கையாரிடம் மருள் நீக்கி அதிக அன்பும், பாசமும், நேசமும் மதிப்பும் கொண்டிருந்தார். பெற்றோர் தம் இரு குழந்தைகளையும் தங்களுடைய இருகண்களே போலச் சீராட்டிப் பாராட்டிப் பாசத்தினால் குளிப் பாட்டி வளர்த்தனர்.

திலகவதிக்கு பனிரண்டு வயதாயிற்று. அழகே உருவாக வடிவெடுத்து வந்துள்ளதோ என்று காண்பவர் வியக்கும் வகையில் எழிலோடு விளங்கினார் திலகவதி. அழகுமட்டுமா? நற்குண நலன்களும் இறையுணர்வும் கொண்டவர் திலகவதி. 'இப்பெண்ணை மனைவியாக அடைபவன் பாக்கியசாலி' என்று கூறினர் ஊரார்.

தமிழக மன்னரின் படை அணியின் தனிப்பெரும் தலைவராக விளங்கினார் **கலிப்பகையார்** என்பவர். அவரும் வேளாளர் குடியில் பிறந்தவர்தான். சிவனடியாரும் கூட. வேளாளர் குலத்தவரின் தலைவராகவும் அதேசமயம் வேந்தரின் படைத் தலைவராகவும் விளங்கிய கலிப்பகையாரை


அறியாதவர் யாருமில்லை-அப்படிப் புகழ் பெற்றவர். சிறப்புமிக்க சேனாபதியாக விளங்கிய கலிப்பகையார், திலகவதியை மணமுடிக்க விரும்பினார். தம் உறவினர் சிலரிடம் தம் விருப்பத்தைத் தெரிவித்தார். அவர்களும் கலிப்பகையாரின் ஆசை சரியானதே என்று ஆமோதித்தனர். புகழனாரின் குடும்பம் பெருமை வாய்ந்தது பெண்ணும் குணவதி, எழில் மிக்கவள்-சேனாபதியாருக்கு ஏற்றவள் என்று கூறவே, அவர்களையே புகழனாரிடம் அனுப்பிப் பெண் கேட்கும்படி வேண்டிக் கொண்டார் கலிப்பகையார். உறவினர் சிலர் திருவாமூர் சென்று புகழனாரிடம், கலிப்பகையாரின் விருப்பத்தைக் கூறி, சம்பந்தம் செய்து கொள்ள விரும்புவதாகக் கூறினர். கலிப் பகையாரின் புகழ்பற்றி அறிந்திருந்த புகழனார், தம் பெண்ணை அவருக்கு மணமுடித்துக் கொடுப்பதில் பெருமகிழ்ச்சியடைவதாகக் கூறி, தம் சம்மதத்தைத் தெரிவித்தார். பெண் கேட்டு வந்தவர்கள் பேரானந்தம் அடைந்தார்கள். இருவீட்டாரும் கலந்து பேசி திருமணம் செய்வதற்கான நாள் பார்ப்பதிலும் வேறு பல காரியங்களிலும் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர்.

இந்நிலையில் வடபுலத்தில் ஒரு பெரும் போர் தொடங்கியது. கலிப்பகையார் சேனாபதி-படைத் தலைவர்-ஆயிற்றே. ஆகவே பகைவனை வெற்றி கொண்டு அவனை அடக்கி ஒடுக்கி விரட்டப் பெரும்படையுடன் வடதிசைக்குச் செல்லும் படியாயிற்று. போரில் வெற்றி பெற்றுத் திரும்பியதும் திருமணம் செய்து கொள்ளுவதாகக் கூறி, உற்றார் உறவினர்களிடம் விடை பெற்றுப் போர்க்களத்துக்குப் புறப்பட்டார்.

பகைவன் பெரும் பலம் பொருந்தியவன், வல்லமை மிக்கவன். எதிர்பார்த்தது போல அவன் படைகளை விரட்டி அடித்து வெற்றி கொள்ளுவது சுலபமாக இல்லை. போர் நாட்கள் தொடர்ந்தன. வெற்றியும் தோல்வியும் கண்ணாமூச்சி விளையாடின. காலம் கடந்து கொண்டிருந்தது. கலிப்பகையாரின் வருகைக்காகப் புகழனாரும் திலகவதியும் காத்துக் கொண்டிருந்தனர்.

எதிர்பாராத விதமாக ஆரோக்கியமுடன் வாழ்ந்து வந்த புகழனார் திடீரென்று நோய்வாய்ப் பட்டார். செல்வந்தரான அவருக்குச் சிகிச்சை அளிக்கச் சிறந்த மருத்துவர்கள் ஓடோடி வந்தனர். ஒப்பற்றமுறையில் மருத்துவம் பார்த்தும் அவர் நோய் குணமாகவில்லை. விதியின் செயலினால் அவர் உயிர் பிரிந்தது. சிவபதம் அடைந்தார். புகழனாரின் துணைவியரான மாதினியார் கற்புமிக்கவர். கணவனைக் கடவுளாக மதிப்பவர். திடீரென்று தம் வாழ்க்கைத் துணைவரை இழந்தது அவரை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இனி இவ்வுலகில் ஏன் வாழ வேண்டும் என்று விரக்தியடைந்தார். கணவனின் நினைவாகவே இருந்த உத்தம .பத்தினியான மாதினியார் இவ்வுலக வாழ்வைத் துறந்தார். கணவரோடு மறுமையிலும் கூடிவாழ விண்ணுலகம் சென்றார்.

பெற்றோர் இருவரையும் ஒரே சமயத்தில் இழந்த திலகவதியும், மருள்நீக்கியும் அழுது துடித்தார்கள். செய்வதறியாது திகைத்தார்கள்–தவித்தார்கள். திலகவதி அறிவில் சிறந்தவள். மாண்டவர்



மீளமாட்டார் என்ற விவேகத்துடன், மனதில் துணிவைத் திரட்டிக் கொண்டார். சிறுவன் தம்பி மருள்நீக்கிக்கு இனி தானே தாயாகவும் தந்தையாகவும் இருந்து, அவனை வளர்த்து ஆளாக்கிக் குலப் பெருமையைக் காக்க வேண்டும் என்று முடிவு செய்தார். சிறுவன் மருள்நீக்கிக்கு ஆறுதல் கூறி, அவன் துயரைப் போக்கினார். தம்பியிடம் முன்னிலும் அதிக அன்பும் பாசமும் காட்டினார்.

பட்டகாலிலே படும் என்பார்கள். சிவனிடம் மாறாத பக்தி கொண்டுள்ள திலகவதியை அந்த முக்கண்ணன் மேலும் சோதிக்கலானான். திலகவதி யாரை மணப்பதாகக் கூறிப் போர்க்களம் புகுந்த கலிப்பகை, பகைவரோடு போரிட்டுப் பலரை வீழ்த்தித் தானும் வீரசுவர்க்கம் அடைந்தார். தகவல் அறிந்த திலகவதி இடிந்து போனாள். "என் பெற்றோர் கலிப்பகையாருக்கு என்னை மனைவியாக்க முடிவு செய்தார்கள். நானும் அவரையே என் கணவராக மனதில் வரித்துக் கொண்டு விட்டேன். ஆகவே இவ்வுடலும் உயிரும் அவருக்கே உரியன. அவர் இறந்த பின் நான் இருந்து பயன் என்ன? நானும் உயிரை விடுவதே முறை" என்ற முடிவோடு பிராணத் தியாகம் செய்ய முற்பட்டார். திலகவதியின் செயலை உற்றார் உறவினர் எவ்வளவோ சமாதானங்களைக் கூறித் தடுக்கமுற்பட்டனர். ஆனால் மனோஉறுதி கொண்ட மங்கை நல்லாள் திலகவதி, எவர் பேச்சையும் கேட்கவில்லை — தன் அருமைத் தம்பியின் வார்த்தை களைத் தவிர.

மருள் நீக்கி, தன் தமக்கையாரின் முடிவைக் கேட்டுக் கண்ணீர் வழிய "பெற்றோரை இழந்த நாளிலிருந்து நான் உங்களையே தாயாகவும் தந்தையாகவும் எண்ணி, அதற்கும் மேலாக என் தெய்வமாகவே உங்களை மதித்து பூஜித்து வருகிறேன் அக்கா! என்னை அநாதையாக்கி விட்டுப்போனால் நான் இவ்வுலகில் எப்படி வாழ்வேன்? என்னைப் பாதுகாக்க யார் இருக்கிறார்கள்? நீங்கள் இறந்தபின் நான் மட்டும் ஏன் வாழவேண்டும்? உங்களுக்கு முன்னால் நான் உயிர்நீத்து, நம் பெற்றோரிடம் போய்ச் சேருகிறேன். நீங்கள் உயிர்துறப்பதை என்னால் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. இது உறுதி" என்றான்.

குட்டித் தம்பியின் பேச்சைக் கேட்ட குணவதியான திலகவதி திகைத்துப் போனாள். நெஞ்சம் நெகிழ்ந்தாள். தன் அருமைத்தம்பி அனாதையாக உலகில் அல்லல்படுவதையோ அல்லது அவனும் உயிர் நீத்து குடும்பம் நாசமடைவதையோ அவளால் நினைத்துப் பார்க்கவும் முடியவில்லை. "நான் இறப்பதினால் கலிப்பகையார் திரும்பிவரப் போவதில்லை. என் மரணத்தினால் மருள் நீக்கியின் வாழ்க்கை பாழா வதையும் நான் விரும்பவில்லை. இனி எனக்கு மணவாழ்க்கை கிடையாது. கைமையை மேற் கொள்வேன். பொன்னாபரணங்களையோ பட்டாடை களையோ அணியமாட்டேன். தவவாழ்க்கை வாழ்ந்து என் தம்பியை ஆளாக்கி அவன் வாழ்க்கையைக் கண்டு மகிழ்வேன்!" என்று உறுதி செய்து கொண்ட திலகவதி அதைத் தன் தம்பி

மருள்நீக்கியிடமும் கூறி அவனை அன்போடு அணைத்துக் கொண்டாள். மருள் நீக்கியும் நிம்மதியடைந்தான்.

2

பெற்றோரையும் தனக்கு வாழ்க்கை அளிக்க இருந்த கணவனாகக் கருதிய கலிப்பகையாரையும் இழந்த திலகவதி, தன் அருமைத் தம்பி மருள் நீக்கியோடு தவவாழ்க்கையை மேற்கொண்டு வாழலானார். மருள் நீக்கி வயதில் சிறியவனானாலும் அறிவில் முதிர்ச்சி பெற்று விளங்கினான். பிஞ்சு உள்ளத்திலே பட்ட காயங்கள் அவனுக்கு வாழ்க்கையின் நிலையாமையை உணர்த்தியது. அவனும் பற்றற்ற துறவிபோல வாழலானான். தந்தை தேடிவைத்த செல்வம் நிறைய இருந்ததினால், பொருளீட்ட வேண்டும் என்ற கவலை இல்லை அவர்களுக்கு. ஆகவே தான தருமங்கள் செய்து பிறர் துயர் களையும் செயல்களிலே தமக்கையும் தம்பியும் ஈடுபடலானார்கள்.

ஏழை எளியவர்களுக்கு, வழிப்போக்கர்களுக்கு அன்னதானம் செய்ய ஆங்காங்கே அன்ன சத்திரங்களை நிறுவினார்கள். தாகவிடாய் தீர்க்கத் தண்ணீர்ப் பந்தல்களை அமைத்தார்கள். அதில் வெறும் நீர்மட்டுமின்றி பானகமும் மோரும் வழங்கி வறியவர்களின் வாழ்த்துக்களைப் பெற்றார்கள். குடிநீர்

வசதியில்லாத கிராமங்களில் கிணறுகளையும் குளங்களையும் தோண்டினார்கள். சாலையோரங் களில் வழிப்போக்கர்களின் ஆயாசம் தீர்க்க நிழல் தரும் மரங்களைப் பயிராக்கினார்கள். இப்படி தம் செல்வத்தைப் பிறருக்குப் பயன்படப் பல காரியங்களைச் செய்து, மன நிறைவு பெற்றார்கள் தமக்கையும் தம்பியும். மருள்நீக்கி இவைதவிர வேறு சில செயல்களிலும் ஈடுபட்டார். அதாவது சமய ஆராய்ச்சி. எந்தமதம் சிறந்த மதம் என்னும் ஆராய்ச்சிமேற் கொண்டார். இதை துரதிர்ஷ்டம் என்றுதான் கூற வேண்டும். பெற்றோர், சைவநெறியே சிறந்த நெறி, முக்கண்ணனான சிவனே முழுமுதற் கடவுள் என்று வாழ்ந்தார்கள். தமக்கை திலகவதியோ சிவப்பழமாக வாழ்ந்து வருகிறார். அப்படி இருக்க மருள்நீக்கிக்கு சைவநெறி மீது ஐயம் ஏற்படுவானேன்? அதைத் தீவினைப்பயன் என்றுதான் கூற வேண்டும்.

அப்போது வடபுலத்தில் தோன்றிய பௌத்தமும் சமணமும் அங்கே வேர் பிடிக்க வழிஇன்றி தென்னகத்தில் ஊடுருவலாயிற்று. தங்கள் மந்திர தந்திரங்களினால் பல மன்னர்களைத் தம் வசப்படுத்தித் தங்கள் சமயமே சிறந்தது என்று நம்பச் செய்து, மன்னர்களையும் அப்பாவி மக்களையும் ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்தனர் சமணர்களும் பௌத்தர்களும். மருள் நீக்கி என்று புகழனார், தம்புதல்வனுக்குப் பெயரிட்டார். மருள் என்றால் மயக்கம். மயக்கத்தை நீக்கியவர் என்று பொருள். மயக்கம் இல்லாதவனாக-தெளிவுடையவனாக வாழ வேண்டும் தம் மகன் என்று ஆசையாக வைத்த பெயர்

அது. ஆனால் சிறந்த சமயம் எது என்பதைத் தேர்ந்தெடுப்பதில் அவர் தெளிவில்லாதவராகிப் போனார். சமணர்களின் தலைமை பீடமான பாடலிபுத்திரம் சென்றார். வடக்கேயுள்ளது போலவே தெற்கேயும் திருப்பாதிரிப்புலியூரின் அருகே ஒருபகுதி பாடலிபுத்திரம் என்று அழைக்கப்பட்டதாகக் கூறுவார்கள். அங்கு சமணர்களின் தவப்பள்ளிகள் பல இருந்தன.

'மோட்சத்தை அடைய உங்கள் சமண சமயம் வழி காட்டுமா?' என்று கேட்டார் மருள் நீக்கியார் ஒரு சமணப் பள்ளியின் தலைமை குருவினிடம். இவ்வாறு ஐயத்தோடு வரும் அப்பாவிகளை எதிர்பார்த்துத் தானே சமணர்கள் காத்திருந்தார்கள். "இலகுவாக மோட்சமடையும் மார்க்கத்தைக் கூறுவது சமணமே. மெய்யான சமயமும் சமணமே" என்றார்கள். தெளிவில்லாத இளைஞர் மருள்நீக்கி அவர்கள் கூறியதை நம்பினார். சைவ சமயத்தைத் துறந்து சமண மதத்தில் சேர்ந்து சமணரானார். சமணர்களின் தத்துவ நூல்களையும் தர்க்க சாஸ்திரம், மந்திரம், மாந்திரீகம் போன்ற அனைத்து சமண நூல்களையும் கற்றுக் கை தேர்ந்தவரானார். சைவப்பிள்ளையாண்டானின் அறிவாற்றலையும் வாதம் புரியும் திறமையையும் கண்ட சமணர்கள் வியந்து மகிழ்ந்தார்கள். நீக்கியாரின் பெயரையே நீக்கிப் புதுப்பெயர் சூட்ட விரும்பினார்கள். 'மருள் நீக்கியார்' என்ற பெயர் இனி உமக்கு வேண்டாம். உமக்கு 'தருமசேனர்' என்று பெயர் சூட்டுகிறோம். நீர் இனி தருமசேனர் என்ற பெயராலேயே அழைக்கப்படுவீர்" என்றார்

சமணப்பள்ளியின் தலைமைகுரு. மருள் நீக்கியாரும் தம் தந்தையாரிட்ட சைவப் பெயரைக் கைவிட்டு சமண முனிவர்களிட்ட **'தரும சேனர்'** என்ற பெயரை ஏற்றுக் கொண்டார்.

பௌத்தர்களுக்கும், சமணர்களுக்கும் எப்போதும் போட்டா போட்டிதான். தங்கள் மதமே சிறந்தது என்று ஆதாரங்களுடன் வாதிடுவார்கள். இத்தகைய விவாதங்களில் சமணர்களின் சார்பாக தருமசேனர் வாதிடுவார். வாசாலகமும் அறிவுத் திறனும் மிக்க தருமசேனர் – மருள்நீக்கி – பௌத்தர்களின் கூற்றுக்களைத் தவிடு பொடியாக்கி அவர்களை வெற்றி கொள்ளுவார். சமண மதத்தினர், தருமசேனரைத் தங்களுக்குக் கிடைத்த வரப் பிரசாதமாகக் கருதி, அவரைத் தங்கள் சமயத் தலைவராகவே அங்கீகரித்தனர்.

தன் அருமைத் தம்பியின் இந்த மதமாற்றம் திலகவதிக்குப் பெரும் மனவேதனையை அளித்தது. இவ்வுலக வாழ்வைத் துறப்பதற்காக இருந்த அக்குணவதி யாருக்காக அதைக் கைவிட்டு வாழ்வதற்கு மனம் மாறினாரோ அவன் – அந்தத் தம்பி – இப்படித் தன்னையும் தன் குலத்தவர், பரம்பரையாக பேணிப் பாதுகாத்த சைவ சமயத்தைத் துறந்து சமணனாகிச் சைவத்துக்குத் துரோகம் செய்வதையும் எண்ணி எண்ணி சதாகாலமும் கண்ணீரும் கவலையும் வேதனையுமாக வாழலானார். தாம் வணங்கும் விரிசடை விமலனிடம் "என் தம்பியின் வாழ்வை இப்படி ஏன் சீர்குலைத்தாய் சிவனே!" என்று கேட்டு விம்மி விம்மி அழலானார். பெற்றோரையும்

இழந்து, கணவனாக வரிக்கப்பட்டவரையும் பறிகொடுத்து, தம்பியையும் பிரிந்து திருவாமூரிலே வாழ்வதற்கு விரும்பவில்லை திலகவதி. வீடும், வீதிகளும், கோயிலும், மனிதர்களும் பழைய நினைவுகளைக் கிளறின. ஊரார் தன் நிலையைப் பார்த்துப் பரிதாபப் படுவதையும், தம்பியைப் பற்றிக் குறையாகப் பேசுவதையும் அவளால் தாங்கிக் கொள்ள முடிய வில்லை. ஆகவே–

அருகில் உள்ள **திருவதிகை** என்னும் தலத்தில் குடியேறினார். அவ்வூர்க்கோயிலில் குடிகொண்டுள்ள திருவீரட்டனார்க்குத் தொண்டு செய்து தம் வாழ்நாளைக் கழிக்க முடிவு செய்தார். கோயில் பிராகாரங்களில் முளைத்திருக்கும் புல்பூண்டுகளை அகற்றி சுத்தம் செய்வார்–பெருக்கி குப்பை கூளங்களை அகற்றுவார். கோயில் நுழைவாயிலில் சாணமிட்டு மெழுகிக் கோலமிட்டு அலங்கரிப்பார். நந்தவனத் துக்குச் சென்று பலவண்ண மலர்களைக் கொய்து கொண்டு வந்து தொடுப்பார். ஈசனுக்கு அணிவிக்க மாலைகள் கட்டுவார். அவற்றை ஈசனுக்கும் மற்ற தெய்வங்களுக்கும் அணிவிக்குமாறு கொடுத்து, குருக்கள் அலங்கரிப்பதைக் கண்டு அகமகிழ்வார். நெற்றியிலே பளீர் என்று திருநீறும், உதட்டிலே கணீர் என்று சிவநாமமுமாக – சிவபக்தையாகத் திலகவதியார் தம் வாழ்நாளைக் கழித்து வந்தார்.

வருடங்கள் உருண்டன. தம்பி மனம் திருந்தி, சமணசமயத்தில் பற்று நீங்கி, மீண்டும் தன்னிடம் வருவான்–சைவனாவான் என்ற நம்பிக்கை நாளுக்கு நாள் மங்கிக் கொண்டே வந்தது. தம்பியின் நினைவு அவரை வாட்டியது. ஒருநாள் இறைவனை நினைந்து

“இப்படி என் தம்பி மருள் நீக்கியை நீங்கள் கைவிட்டுவிட்டீர்களே, இது நியாயமா? உங்களையே எண்ணி உயிர் வாழும் எனக்கு உறுதுணையாக, என் தம்பியை சமணப்படுகுழியிலிருந்து மீட்டு எனக்குத் தரமாட்டீர்களா? உங்களைக் கருணாமூர்த்தி என்கிறார்களே, அது பொய்யாகலாமா? என்னை ஏன் இப்படிச் சோதிக்கிறீர்கள்?’’ என்று மனமுருகி வேண்டிக் கொண்டு நிம்மதி இன்றி நித்திரை போனார்.

அல்லலுறும் அடியவர்களின் துயர் துடைக்கும் கருணாமூர்த்தியான கங்காதரன் அன்று இரவு திலகவதியின் கனவிலே தோன்றினார். “கவலைப் படாதே குழந்தாய்! மருள் நீக்கியை மறுபடி சைவனாக்குவது என் பொறுப்பு. காலம் கனிவதற் காகவே காத்திருந்தேன். வேளை வந்துவிட்டது. உன் வேண்டுகோளின்படி உன் தம்பியைத் தடுத்தாட் கொள்ளுவேன். அவனுக்கு ‘சூலைநோய்’ வரும். அதைக் குணப்படுத்திக் கொள்ள உன்னிடம் வரும்படி செய்வேன். அவனுக்குத் திருநீறணி. அவன் சூலைநோய் அகலும், சைவனாகவும் மாறுவான்” என்று கூறி மறைந்தார். கனவு நீங்கிக் கண் விழித்த திலகவதி மகேசனின் கருணையை எண்ணிக் கண்ணீர் மல்கிக் களிப்புற்றார். அவரிடம் புதிய தெம்பும் நம்பிக்கையும் ஏற்பட்டன. அருமைத் தம்பியின் வரவை எதிர்பார்த்து நாட்களை எண்ணிக் கொண்டிருந்தார்.

பாடலிபுத்திரத்தில் பாயையே உடையாக, மயில்பீலிக் கட்டையும் குண்டிகை எனப்படும்

கமண்டலமும் உடைமையாக — சமணராக வாழ்ந்து வந்த தருமசேனர் என்ற மருள் நீக்கியாருக்குத் திடீரென்று வயிற்று வலி நோய் தோன்றியது. சாதாரண வயிற்று வலியல்ல-குலையைச் சுண்டி இழுக்கும் கொடிய சூலைநோய். தாங்கமுடியாத வலியால் துடித்தார், தரையில் கிடந்து புரண்டார் 'ஐயோ, அம்மா, அக்கா! அப்பா! என்று அரற்றினார். அழுதார். சமண மருத்துவர்கள் ஓடிவந்தார்கள். மருந்துகள் கொடுத்தார்கள்-சமண முனிவர்கள் வந்தார்கள். மந்திரங்களை ஓதி மயிற் பீலியால் தடவி, அருக்கதேவனை அழைத்து, சூலைநோயைப் போக்கும்படி வேண்டினார்கள். அவர்களுடைய மருந்துகளும் மந்திரங்களும் பலனற்றுப்போயின. தருமசேனரின் வயிற்றுவலியோ விநாடிக்கு விநாடி அதிகமாகிக் கொண்டுவந்தது. சமணர்கள் தங்கள் சாமர்த்தியங்கள் அனைத்தையும் காட்டித் தோல்வி கண்டு, "உம் நோயைப் போக்க எங்களால் இனிச் செய்வதற்கு ஏதுமில்லை" என்று கூறிப் போய் விட்டார்கள்.

அந்த இக்கட்டான வேளையில், இடர் வந்துள்ள போது அவருக்குத்தன் தமக்கையின் நினைவு வந்தது. "என் அன்பு அக்கா இப்போது என் அருகிலிருந்தால் எவ்வளவு ஆறுதலாக இருக்கும்? நான் கண் கலங்குவதைக் காணச் சகிக்கமாட்டாளே. அந்த அன்புத் தெய்வத்தைப் பிரிந்து வந்து எத்தனை நாளாகிறது! என் நிலையை அறிந்தால் ஓடோடி வந்து விடுவாளே!" என்றெல்லாம் திலகவதியின் நினை வினால் உருகிய தருமசேனர் சமணமடத்தில் தனக்கு

நெருக்கமான ஒருவரை அழைத்துத் திலகவதியாரிடம் போய் விஷயத்தைக் கூறி, தமக்கையைக் கையோடு அழைத்து வருமாறு கேட்டுக் கொண்டார்.

அந்த அருக்கத் துறவி இரவோடு இரவாக, தாமதிக்காமல் வழிநடந்து திருவதிகை போய், திலகவதியாரிடம் அவரது தம்பியின் நிலையைக் கூறினார். "உங்களை ஆவலுடன் எதிர்பார்க்கிறார் வாருங்கள்" என்றழைத்தார். அருமைத் தம்பி படும் அவதியைக் கேட்டு மனம் தவித்தார் சகோதரியை கனவில் கருணாமூர்த்தி கங்காதரர் கூறியது நினைவிற்கு வரவே மனதைத் திடப்படுத்திக் கொண்டு, "நான் எக்காரணமானாலும் சமணர்கள் வாழும் பகுதிக்குள் அடியெடுத்து வைக்கமாட்டேன். நான் சைவ சமயத்தைத் தீவிரமாகப் பின்பற்றுபவள். என் தம்பி சமணனாகி தருமசேனனாக இருப்பதில் எனக்கு விருப்பமில்லை. இதை அவனிடம் கூறுங்கள். என்னைக் காண விரும்பினால், அவனை இங்கே வரச் சொல்லுங்கள்" என்று அந்த சமணத் தூதுவரிடம் சொல்லி அனுப்பினாள்.

திலகவதியார் கூறியதை அப்படியே தருமசேனரிடம் கூறினார் அவர். தமக்கையாரின் எண்ணமறிந்த தருமசேனர் மனம் தளர்ந்தார். சைவத்தைப் புறக்கணித்த தம் தவறை உணர்ந்தார். திரிபுரம் எறித்த பெம்மானிடம் தீவிர பக்தி செலுத்திக் கட்டுப்பாட்டோடு வாழும் சகோதரியை எண்ணிப் பெருமிதம் கொண்டார். எதற்கும் உதவாத இந்த சமண சமயத்தை உடனே கைவிட்டுத் தமக்கையின் காலடியில் போய் விழவேண்டும். அப்போதுதான்

இந்தச் சூலை நோய் தீரும் என்ற முடிவுக்கு வந்தார். "என் வயிற்று வலி வளர்ந்து கொண்டிருக்கிறது. என் நாடி தளர்ந்து கொண்டிருக்கிறது. இது இப்படியே தொடருமானால் நான் உயிர் நீப்பது நிச்சயம். என் தமக்கையாரினால் மட்டுமே என் நோயைக் குணப் படுத்த முயலும். ஆகவே எனக்கு உதவுங்கள்" என்று தம் சமண நண்பர்கள் சிலரிடம் வேண்டிக் கொண்டார். நல்லமனம் கொண்ட அவர்கள் தரும சேனருக்கு உதவ இணங்கினார்கள்.


இரவு ஊரடங்கியதும் சமண நண்பர்கள் தருமசேனரிடம் வந்தனர். அவர் தமது சமணச் சின்னங்களான பாயுடை, குண்டிகை, மயில்பீலி ஆகியவற்றைத் துறந்து, தூய வெள்ளை ஆடை அணிந்து புறப்படத் தயாராக இருந்தார். தன் கோலத்தைக் கண்டு சமண நண்பர்கள் திகைப்பதைக் கண்ட மருள் நீக்கி "என் தமக்கை சிவபக்தை. சமணக் கோலத்துடன் நான் போனால் என்னை ஏற்கமாட்டாள்" என்று அவர்கள் உதவியைப் பெற ஐயத்தைப் போக்கினார். நடக்க முடியாத அவரை நண்பர் இருவரும் இருபக்கத்திலும் தாங்கிப் பிடித்துக் கொண்டனர். அவர்களின் தோள் மீது கைபதித்து மெல்ல அடிவைத்து நடக்கலானார். விடியும் வேளையில் திருவதிகை வந்தனர். தரும சேனரின் தமக்கை திலகவதியார் வதியும் திருமடத்தினருகே அவரை விட்டு விட்டு, விடை பெற்றார்கள் சமண நண்பர்கள்.

"அன்னையினும் அதிகமான அன்பும் பரிவும் காட்டி என்னை ஆளாக்கிய கருணைக் கடலே! குலப்

பெருமை காத்து, சைவம் தழைக்க வாழும் குணக் கொழுந்தே! வழி தவறிப் போன நான் தீராத வயிற்று வலியினால் அவதிப்படுகிறேன். என் சூலை நோயைப் போக்கி எனக்கு நல்வழி காட்ட வேண்டும்" என்று கதறினார்.

தன் காலடியில் விழுந்து கிடக்கும் தன் அருமைத் தம்பி மருள் நீக்கியை அள்ளி எடுத்தார் திலகவதியார். ஊற்றென வழியும் அவன் கண்ணீரைத் துடைத்தார் "அஞ்செழுத்தான நமசிவாய மருந்திருக்கும் போது நீ அஞ்ச வேண்டியதில்லை" என் ஆதரவாக அழைத்துப் போய் ஓர் இருக்கையில் அமர்த்தினார். "இவ்வுல கையும் இவ்வுலகிலுள்ள அனைத்து ஜீவன்களையும் அன்போடு பாதுகாப்பவர் கருணாமூர்த்தியான வரிசடை விமலன். அவர் பெயரைக் கூறினாலே எப்பிணியும் பனிபோல விலகும். அவரை மறந்தாய். அதன் பலனே இச்சூலை நோய். 'இனி எந்நாளும் உனை மறவேன்' என்று கூறி இத்திருநீறைப் பூசிக் கொள்" என்று ஐந்தெழுத்தினால் ஓதப்பெற்ற விபூதியைத் தம்பியிடம் கொடுத்தார். பயபக்தியுடன் அவர் அளித்த விபூதியை இருகையேந்தி வாங்கிக் கொண்ட மருள்நீக்கியார், தன் வயிற்றிலும் உடலெங்கும் பூசிக் கொண்டார். இரவுமுழுதும் நடந்து வந்த களைப்பினால் அப்படியே உறங்கிப் போனார்.

காலையில் கண் விழித்ததும் தம்பி அருள் நீக்கியை நீராடச் செய்து திருநீறணியச்செய்தார் திலகவதியார். பிறகு கைத்தாங்கலாக அவரைப் பிடித்தபடி, திருவதிகையின் திருக்கோயிலுக்கு அழைத்துப் போனார். திருவீரட்டானேசுவரர்




சந்நிதியில் வீழ்ந்து வணங்கச் செய்தார். சமணச் சின்னங்களை நீக்கிய போதே தருமசேனரும் ஒதுங்கினார். மருள் நீக்கியாரின் குற்றங்கள் மன்னிக்கப்பட்டுவிட்டன. இப்போது சிவச் சின்னமான திருநீறணிந்து நீலகண்டனின் நினைவாக தரையில் விழுந்து வணங்கி எழுந்து, சிரமேற் கரங்குவித்து கண்மூடிக் கண்ணீர் மல்க நிற்கும் மருள் நீக்கியின் வாயினின்று தமிழ்ப் பாசுரம் பிறந்தது. **"கூற்றாயினவாறு விலக்கினீர்"** என்று தொடங்கும் பாடலைப் பாடினார். அதுவரை பதிகம் பாடி அறியாத அவர் வாயிலிருந்து ஊற்றுப் பெருக்கெனப் பாடல்கள் பிறந்தன. சூலைநோயோ முழுவதும் அவர் உடலை விட்டு ஒழிந்தது. திரிபுரம் எரித்த சிவபெருமானல்லவா? தடுத்தாட் கொள்ள அவரால் ஏவப்பட்ட நோயை, அவரே எடுத்துக்கொண்டார்.

அப்போது தெய்வவாக்கு ஒன்று ஒலித்தது. "இனிக்கும் தேன் தமிழில் நீ எனைப்பாடி மகிழ்வித்தாய். ஆகவே இனி உம்மை மக்கள் **'திருநாவுக்கு அரசர்'** என்று அழைப்பார்களாக. உன் பெயரும் புகழும் ஓங்கும்". மீண்டும் சைவத்தை ஏற்றுத் தம்மை அடைந்த மருள் நீக்கியாருக்கு இறைவனே இட்ட பெயர் 'திருநாவுக்கரசர்'. ஆலயத்தினுள் இருந்த சிவநேசச் செல்வர்கள் அனைவரும் அசரீரியான தெய்வவாக்கு கேட்டு ஆனந்தப் பரவசமுற்று ஆரவாரித்து மகிழ்ந்து போற்றினர். அன்றுமுதல் மருள் நீக்கியாரை சிவபக்தர்கள் **திருநாவுக்கரசர்** என்று அழைக்கலானார்கள்.

3

சமணமதத் தலைவர்களுக்கு தருமசேனர் மீண்டும் சைவராகிய விஷயம் தெரிந்தது. தங்கள் சமய மருத்துவர்களாலும், மந்திரவாதிகளாலும், மந்திரங் களாலும் அவரது சூலை நோயைப் போக்க முடியாமையே; மிக்க ஈடுபாட்டுடன் சமணராக இருந்த தருமசேனர் இதைத் துறந்து சென்றதுக்குக் காரணம் என்பதை அறிய அவமானமும், ஆத்திரமும், பயமும் அடைந்தார்கள். அவமானம் ஆத்திரம் சரி. பயம் ஏன்?

பல்லவமன்னனிடம் தங்களுக்குள்ள செல் வாக்குப் பறிபோகுமே என்ற பயம்தான். அப்போது காஞ்சியைத் தலைநகராகக் கொண்டு பல்லவ நாட்டை மகேந்திரவர்ம பல்லவன் ஆண்டு வந்தான். சமணர்கள் தங்கள் திறமையினால் மன்னனின் மூளையைச் சலவை செய்து அவனைச் சமணமதச் சார்புடையவனாக்கி இருந்தார்கள். மன்னனும் மதிகெட்டு அவர்களுக்குப் பல சலுகைகளை வழங்கி இருந்தான் இந்நிலையில் சைவ சமயத்தின் பெருமை விளங்கும்படி தரும சேனருக்கு, திருநீறினால் சூலை நோய் அகன்றதையும் சிவனே தம் வாயினால் அவரை 'நாவுக்கரசராவீர்' என்று பாராட்டி வாழ்த்தியதையும் அறிவானானால், சமணர்களின் கதி என்னாவது என்று கலங்கினார்கள். மன்னன் மனம் மாறாதிருக்க-சமணத்தைத் துறந்து சைவனாகாதிருக்க, ஏதாவது செய்தாக வேண்டும் என்று தீவிரமாகச் சிந்திக்க லானார்கள்.



தாம் பதிகம் பாடியதைப் பாராட்டி, தமக்குப் பெயரை சூட்டி ஆட்கொண்ட முக்கண்ணனை எண்ணி எண்ணி நெஞ்சம் நெகிழ்ந்து போனார் நாவுக்கரசர். கைலைநாதனின் கருணையை, தடுத்தாட் கொள்ளும் தகைமையைப் போற்றி மேலும் மேலும் பலபதிகங்களை நாவினிக்க நாளெல்லாம் பாடினார். அப்படியும் அவருக்குத் திருப்தி ஏற்படவில்லை. தன் நன்றிக்கடன் இன்னும் தீரவில்லை என்று கருதினார். "எனை ஆண்ட ஈசனை வார்த்தைகளால் புகழ்ந்தால் போதாது. அவருக்கு என் உடலாலும் உழைக்க வேண்டும்" என்று முடிவு செய்தார். தமக்கையைப் போலவே தானும் குடும்ப வாழ்க்கையை மேற்கொள்ளப் போவதில்லை என்று உறுதிபூண்டார். தொண்டு செய்தே தன் வாழ்க்கையை முடிக்க வேண்டும் என்று சிவத்தொண்டு-சிவாலயங்களைச் செப்பனிடும் தொண்டை மேற்கொண்டார். ஆலயங் களின் பிராகாரங்களிலும், மதில் சுவர்களிலும், கோபுரங்களிலும் முளைத்துள்ள புல், பூண்டுகளை உழவாரம் எனப்படும் கருவி கொண்டு செதுக்கிக் களைந்து சுத்தம் செய்யலானார். ஆலயங்களும் அதன் சுற்றுச் சூழல்களும் தூய்மையாக இருக்க வேண்டும் என்று பிரசாரம் செய்தது மட்டுமல்லாமல்-தானே களை எடுத்து உழவாரப்பணி செய்து உதாரணமாகத் திகழ்ந்தார். நாவுக்கரசரின் நாவன்மையும் சிவத் தொண்டும் நாடெங்கிலும் பரவிப் புகழ் பரப்பியது.

ஒற்றர்கள் மூலம் பல்லவ நாட்டுக்கும் நாவுக்கரசரின் புகழ் சென்றது. உடனே சமணர்கள்

உஷாரானார்கள். "தருமசேனர் சமண மார்க்கத்தைத் துறந்து சைவத்துக்குப் போவானேன்? சைவ சமயத்தில் பெரும் புகழோடு விளங்குவதாகச் செய்திகள் வருகின்றதே இது எப்படி, ஏன்?" என்று மன்னன் சமணர்களைக் கேட்டபோது அவர்கள் சமத்கார மாகப் பதில் சொன்னார்கள்.

"அரசே! நீங்கள் கேட்டதெல்லாம் வெறும் கட்டுக்கதை. தனக்கு ஏற்பட்ட சூலை நோயை சமண மருத்துவர்களால் குணப்படுத்த முடியவில்லையாம். அத்தனையும் பொய். சமணத்தில் இல்லாத மருந்துகளா? எங்கள் மந்திரங்களால் நாங்கள் எவ்வளவோ அற்புதங்களை நிகழ்த்தி இருப்பதை நீங்கள் அறிவீர்கள். தருமசேனருக்கு சூலைநோயே இல்லை. அவனுக்குத் தன் தமக்கையின் மீது பாசம். அவளை விட்டுப் பிரிந்திருக்க முடியவில்லை. அவளோ தீவிரமாக சிவநெறியைப் பின்பற்றுபவள். அக்காளுடன் வாழ்வதற்கு என்ன வழி என்று பார்த்தான். தனக்கு சூலைநோய் என்று நாடகமாடினான். சமண மருத்துவர்கள் கொடுத்த மருந்துகளைச் சாப்பிடாமல், நோய் குணமாகவில்லை என்று கூக்குரலிட்டான். நோய் இருந்தாலல்லவா மருந்து சாப்பிடமுடியும்? அவன் ஒரு வேஷதாரி. தமக்கையிடம் போனதும் அவள் கையால் திருநீறு பெற்று பூசிக்கொண்டதும் கொடிய சூலைநோய் ஓடியே போய்விட்டதாம். கதையளக்கிறான். அவனை உயிரோடு விட்டு வைத்தால் இம்மாதிரி பொய் புனைசுருட்டுக்களைக் கூறியே நமது உயர்ந்த சமண சமயத்தை அழித்து விடுவான். துரோகி! அவனைக் கொல்ல வேண்டும்" என்று தூபம் போட்டனர்.

ஆய்ந்தறியும் திறனில்லாத பல்லவ மன்னனுக்கு நாவுக்கரசரின் மீது கடுங்கோபம் ஏற்பட்டது. தமது அமைச்சரை அழைத்து "உடனே திருநாவுக்கரசரை இங்கு இழுத்து வாருங்கள்-அவனுக்குத் தகுந்த புத்தி புகட்ட வேண்டும்'' என்று ஆணையிட்டார். சமணர்கள் மகிழ்ந்து போனார்கள்.

அமைச்சர் ஆட்படைகளுடன் திருநாவுக்கரசரைக் காணத் திருவதிகைக்குப் போனார். அங்கு சிவநேசச் செல்வரைக் கண்டு, அரச ஆணையைக் கூறித் தம்முடன் வருமாறு அழைத்தார். அரசாணையைக் கேட்ட நாவுக்கரசர் "நான் உங்கள் மன்னனுக்கு அடிமையல்ல-ஏன் யாருக்குமே நான் அடிமையல்ல. என் அப்பன் சபாபதியைத் தவிர. ஆகவே நான் உம் அரசரின் ஆணைக்குப் பயப்பட மாட்டேன். மரணத்தைக் கண்டு நான் நடுங்கவில்லை. ஆகவே யமனிடமும் எனக்குப் பயமில்லை. சூது, வாது, வஞ்சகம், பொய், புனைசுருட்டு செய்தறியாதவன் நான். ஆகவே மறுமையில் நரகம் கிடைக்குமோ என்ற ஐயமும் இல்லை. இவ்வுலகில் எனக்கு இன்பமே தவிரத் துன்பம் ஏதுமில்லை. மன்னர் ஆணையிட்டு அழைக்கும் அளவுக்கு நான் எளியவனும் அல்லன் என்று பொருள் கொண்ட **"யாம் யார்க்கும் குடி அல்லோம் நமனை அஞ்சோம்"** என்னும் பதிகத்தைப் பாடினார். பிறகு அமைச்சரைப் பார்த்து "நான் பல்லவ மன்னனின் ஆணைக்குக் கட்டுப்பட்டு உம்மோடு அரண்மனைக்கு வரமுடியாது" என்றார்.

பாவம் அமைச்சர் பாடு திண்டாட்டமாகியது. நாவுக்கரசரோடு வராவிடில் மன்னனின் கோபம்

எப்படி இருக்கும் என்பதை அவர் அறிவார். மன்னரின் கோபத்தைக் கிளறிவிட சமணர்கள் வேறு இருக்கிறார்கள். தவித்துப்போன அமைச்சர் நாவுக்கரசரின் அடிகளில் விழுந்து "தாங்கள் வராவிடில் அரசன் என்னைத் தண்டிப்பான். என் பொருட்டாவது தாங்கள் அரசவைக்கு வரவேண்டும்" என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார். நாவுக்கரசர் யோசிததார். தம் பொருட்டுப் பிறர் துன்பம் அனுபவிப்பதை விரும்பவில்லை. தவிர எந்நேரமும் என் சிந்தையில் குடிகொண்டிருக்கும் எம்பிரான் பார்வதிநாதன் இருக்கும்போது யாரும் எனக்கு எந்த ஊறும் விளைவிக்க முடியாது என்ற முடிவோடு, அமைச்சரோடு பல்லவ நாட்டுக்குக் கிளம்பினார்.

மன்னன் ஒரு மதியீனன். நீதி வழங்குவதில் கூட சமணர்களின் உதவியை நாடினான். சுயமாகச் சிந்திக்கும் திறனில்லாதவன். சபையில் நிறுத்தப் பட்டுள்ள நாவுக்கரசருக்கு என்ன தண்டனை வழங்கலாம் என்று சமணர்களிடமே கேட்டான், முட்டாள்!

பொறாமையும் கர்வமும் தலைக்கேறியுள்ள சமணர்கள் "இவனுக்கு சூலை நோய் கண்டதாம். துடித்தானாம். அதை நம்மால் போக்கமுடியவில்லை என்று சூலம் ஏந்திய சைவச்சாமியிடம் சரணடைந்தானாம்-இப்படிப் பொய் சொல்லி நம் சமயத்தை இழிவுப்படுத்திய இத்துரோகியைச் சுண்ணாம்புக் காளவாயில் தள்ளச் செய்யுங்கள். சூலமேந்திச் சுடுகாட்டில் திரியும் இவன் நம்பும் சாமி, சுண்ணாம்பில் வேகாமல் இவனை காப்பாற்ற

வருகிறாரா பார்ப்போம்!" என்று அரசனுக்குப் பரிந்துரைத்தனர். மதிகெட்ட மன்னனும் ஆராயாமல் அவர்கள் கூறியபடியே நாவுக்கரசரைக் காளவாயில் தள்ள உத்தரவிட்டான்.

மன்னனின் கட்டளையைக் காவலர்கள் நிறைவேற்றினார்கள். நாவுக்கரசர் சிந்தை கலங்கவில்லை. அவர் சிந்தையில் குடி கொண்டிருப்பவனே செந்தழல் மேனியனாயிற்றே! அப்படி இருக்க சுண்ணாம்புக் காளவாய்த் தீக்கனல் அவரை என்ன செய்யும்? கவலையின்றிக் காளவாயில் சம்மணமிட்டு அமர்ந்தார். கண்களை மூடி சிவயோகத்திலாழ்ந்தார். தகிக்கும் அந்தச் சுண்ணாம்புக்காளவாய் பனிக்குகை போலக் குளுகுளுவென்றாயிற்று. நிலவும் தென்றலும் வீசும் வசந்த இரவைப் போன்ற சுகத்தை அளித்தது காளவாய். தண்புனல் தடாகத்தில் முங்கி இருப்பது போன்ற உணர்வை உண்டாக்கியது. அடியவரின் துயர் துடைக்கும் அண்ணலின் கருணையை நினைந்து நெஞ்சம் நெகிழ, கண்ணீர் கசிய **"மாசில் வீணையும் மாலை மதியமும் வீசு தென்றலும்"** என்று தொடங்கும் பதிகம் அவர் நெஞ்சத்தினடியிலிருந்து பிறந்தது. ஈசனின் இணையடி நிழலிலே தன்னை நிறுத்திக் கொண்டு சமாதி நிலையில் காளவாயில் வீற்றிருந்தார் நாவுக்கரசர்.

சுண்ணாம்புக் காளவாய் வெப்பத்திலே வெந்து மடிந்து நீறாகிப் போயிருப்பார் நாவுக்கரசர் என்று எண்ணி மகிழ்ந்த மன்னனும் சமணர்களும் காளவாய்க் கதவைத் திறக்கச் செய்தார்கள்–அந்தக் காட்சியைக்கண்டு ரசிக்க. கதவு திறக்கப்பட்டது.


அனல்காற்று வீசவில்லை. குளிர் தென்றல் குபுகுபு என்று வெளிப்பட்டது சாம்பலான நாவுக்கரசரின் நீறான உடலுக்குப்பதில் — சம்மணமிட்ட நிலையில், உடலில் திருநீரணிந்த கோலத்தில் அவர் நிஷ்டையில் அமர்ந் திருப்பதைக் கண்டு திடுக்கிட்டனர். மன்னன் சமணர்களைப் பார்த்தான் வினாக்குறியோடு.

சமணர்கள் உடனே சமாளித்துக் கொண்டு "இப்படி ஒரு காட்சியை நாம் காணப் போகிறோம் என்று நாங்கள் முன்பே யூகித்தோம். இந்தச் சைவன் நம் சமயத்தில் சேர்ந்ததே நம்முடைய மந்திரங்களை கற்பதற்குத்தான். திறமைசாலியான இவன் சமண மந்திர தந்திரங்களை நன்கு கற்று தேர்ந்திருக்கிறான். நம்மிடம் கற்ற கலைகளைக் கொண்டே இப்போது நம்மிடம் சித்து விளையாடுகிறான்" என்றார்கள் சமத்காரமாக - தங்கள் தோல்வியை மறைக்க

"இனி என்ன செய்வது?" என்று கேட்டான் மதிகெட்ட மன்னன்

"இக்கயவனைக் கொல்ல எத்தனையோ மார்க்கங்கள் உண்டு மன்னா, கவலை வேண்டாம்" என்று தேற்றினார்கள். "கொடிய விஷத்தை பாலோடு கலந்து இவன் உண்ணும் உணவிலே அதைச் சேர்த்து அளிக்கச் செய்யுங்கள். செத்துமடிவான் இந்த நீசன்" என்றார்கள். பிரகலாதனைக் கொல்ல இரண்யன் கையாண்ட முறைகள் சமணர்களுக்கு நினைவு வந்தது போலும். விஷமுண்ட நீலகண்ட சிவனை மறந்து போனார்கள்.

சமணர்கள் யோசனைப்படி நாவுக்கரசருக்கு விஷ உணவு பரிமாறப்பட்டது. நஞ்சுண்ட நமசிவாயன்



அவர் சிந்தையில் குடி கொண்டிருக் கும்போது, பல்லவன் அளித்த விஷம் என்ன செய்ய முடியும்? ஆலகால விஷத்தையே அள்ளிப் பருகியவனாயிற்றே-பாம்புகளையே ஆபரணமாக அணியும் பரமசிவன்! விஷம் கலந்த உணவைச் சுவைத்து உண்டு ஏப்பம் விட்டார். நாவுக்கரசருக்கு நீலகண்டனின் அருளால் விஷ உணவு எவ்விதப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

தோல்வியினால் வெகுண்ட பல்லவ மன்னன், யானைப் பாகர்களை அழைத்து "மதயானையைக் கட்டவிழ்த்து விடுங்கள். அதன் காலடியில் இக்கயவனைத் தள்ளுங்கள். இவன் தலையை, மதயானை தன் காலினால் இடறித் துகைக்கட்டும்" என்று சினந்து சீறினான். யானைப் பாகர்களும் அரசரின் கட்டளைப்படி மதயானையைக் கட்டவிழ்த்து நாவுக்கரசர்மீது ஏவினார்கள்.

திருநாவுக்கரசர் அஞ்சவில்லை. யானையைத் தோலுரித்து அதை ஆடையாக அணிந்த சிவனைச் சிந்தையில் இறுத்தி, அசையாமல் சிவன் புகழ் விளங்கப் பதிகம் பாடி நின்றார். பாகர்களால் சீண்டி விடப்பட்ட யானை, பிளிறியபடி ஓடிவந்தது. திருநீறணிந்து உழவாரம் தாங்கி சிவப்பழமாக நிற்கும் நாவுக்கரசரைக் கண்டதும் சட்டென்று நின்றது. அதன் வெறி அடங்கியது. சிவனடியாரை வலம் வந்து அவர் முன் மண்டியிட்டு வணங்கியது. அடியாரை ஏதும் செய்யாமல் சாதுவாகத் திரும்பலாயிற்று. இதைக் கண்ட யானைப்பாகன் அரசகோபத்துக்கு அஞ்சி, யானையை அங்குசத்தினால் குத்தி, நாவுக்கரசரை

நசுக்கிக் கொல்லுமாறு விரட்டினான். இதனால் வெகுண்ட யானை, பாகனைத் தன் துதிக்கையினால் சுற்றி எடுத்துத் தன் காலின் கீழ் போட்டு மிதித்துக் கொன்றது. அதன் பிறகும் அதன் கோபம் அடங்கவில்லை. திருநாவுக்கரசரின் முடிவைக் காணக் கூடி இருந்த சமணர் கூட்டத்தை நோக்கிப் பாய்ந்தது. பீதி கொண்ட சமணர்கள் சிதறி ஓடி ஒளிந்தனர்.

நடந்ததை அறிந்த பல்லவ மன்னன் மகேந்திர வர்மன் ''தருமசேனர் இவ்வளவு சாமர்த்தியம் உள்ளவரா? அவரைப் பற்றி என்னிடம் நீங்கள் இதுவரை ஏதும் சொல்லவில்லையே'' என்று குறைப்பட்டுக் கொண்டான்.

"சாமர்த்தியமாவது மண்ணாவது? எல்லாம் இங்கு சமணனாக இருந்த போது எங்களிடம் கற்றுக் கொண்டது. தீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கிறான். அவன் சைவனாக இருந்தபோது என்ன அற்புதம் செய்தான்? நம்மிடமிருந்து எல்லா மந்திரங்களையும் கற்றுக் கொண்டு போய், சுடுகாட்டுச் சாம்பலைப் பூசி மண்டையோட்டையேந்தி பிச்சை எடுக்கும் சிவனை கருணாநிதி என்று கண்ணீர் வடிக்கிறான்" என்று கடுமையான வார்த்தைகளால் சைவத்தை நிந்தித்தார்கள் சமணர்கள்.

''நாம் மேற்கொண்ட முயற்சிகள் எதுவும் பலனளிக்கவில்லையே'' என்று கவலையோடு முகவாயைத் தடவினான் பல்லவன். "தருமசேனரைக் கொல்லமுடியாது போலிருக்கிறதே!"

"இம்முறை நமக்குத் தோல்வியே ஏற்படாது. நாங்கள் கூறுகிறபடி செய்யுங்கள்'' என்றார்கள் சமணமுனிவர்கள். "அவன் என்ன அருகதேவனா-இல்லை இறவா வரம் பெற்றவனா? எல்லாம் சித்து வேலை"

"அது சரி... என்னதான் செய்யவேண்டுமென் கிறீர்கள்?'' கேட்டான் மன்னன்.

"ஒரு பெரிய கருங்கல்லில் அந்தப் போலிச் சந்நியாசியை உறுதியான கயிறினால் பிணைத்து, கடலின் ஆழமான பகுதியில் கொண்டுபோய்த் தள்ளிவிட்டு வரச் செய்யுங்கள். தருமசேனன் கடலின் அடியில் போய் அமிழ்ந்து சுறாமீன்களுக்கு உணவாவான். அவன் வணங்கும் சிவனால் அவனைக் காப்பாற்ற முடிந்தால் காப்பாற்றட்டும்" என்றார்கள் சமணர்கள்.

மன்னனுக்குச் சமணர்களிடம் உள்ள மதிப்பு இன்னும் குறையவில்லை. மதிப்பு என்பதை விட ஒருவிதப் பயம் அவர்களிடம். ஆகவே அவர்கள் விருப்பப்படி நாவுக்கரசரைப் பெரியதோர் கருங் கல்லில் கயிறுகளால் பிணைத்து, தோணியில் கொண்டுபோய் நடுக்கடலில் வீசிவிட்டு வருமாறு கட்டளையிட்டான். ஏவலர்களும் மன்னனின் ஆணையை நிறைவேற்றுவதில் முனைந்தார்கள். அவர் களுடைய கண்கள் பனித்தன. சமணர்கள் பேச்சைக் கேட்டு இப்படி மன்னர் அடாத காரியங்களைச் செய்கிறாரே என்று மனம் வருந்தினர். காள வாயும், ஆலகால விஷமும், மதயானையின் ஏவலும் இந்தச் சிவனடியாரை ஏதும் செய்யாததை அறிந்திருந்தனர்.

விருப்பமில்லாமல் கல்லில் பிணைத்த அவரைத் தோணியில் நடுக் கடலுக்குக் கொண்டு போனார்கள்.

அரசசேவகர்களின் உள்ளக்கிடக்கையை அவர்கள் முகபாவத்திலிருந்து உணர்ந்து கொண்ட நாவுக்கரசர் "நீங்கள் வருந்தவேண்டாம். உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள். இதுவரை என்னைக் காப்பாற்றிய எம்பிரான், உமையொருபாகன் இம்முறையும் என்னைக் காப்பாற்றுவான்" என்று கூறி **"சொற்றுணை வேதியன் சோதிவானவன்"** என்று தொடங்கும் பதிகங்களைப் பாடலானார். நமசிவாயப் பதிகம் எனப்படும் பத்துப் பாடல்களைக் கொண்டது அது. ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் "நமசிவாயவே" என்று முடியும்.

நாவுக்கரசரோடு பிணைத்த பெரும் பாறைக் கல்லைக் கடலில் உருட்டிவிட்டுக் கனத்த மனத்துடன் காவலர்கள் அரண்மனை திரும்பினர். அடிகள் பத்தாவது பதிகம் பாடி முடித்ததும் பெரும் பாறாங்கல் கடலின் அடியிலிருந்து குபீரென்று தக்கையைப் போல மிதந்தபடி கடல் மட்டத்துக்கு மேலே வந்தது–அரவு அணிந்த சிவனின் அருட்பார்வையினால். அவரைக் கட்டி இருந்த கயிறுகள் பூக்கள் தொடுத்த மாலையாகியது. சற்றைக்கெல்லாம் தக்கையாக மிதந்த கல் சிவிகையாக மாறியது. பல்லக்கிலே விதானமாக விரிக்கப்பட்டிருந்த பட்டுத் துணி பாய்மரத்துணி போலாகியது. பல்லக்கு படகாகி, அலைகடலைக் கிழித்துக் கொண்டு செல்லலாயிற்று.

நாவுக்கரசரை மீண்டும் பல்லவ மண்ணில் சேர்ப்பிக்க இறைவனுக்கு விருப்பமில்லை.

திருப்பாதிரிப்புலியூர் என்னும் கடற்கரைத் தலத்தின் கரையில் போய் ஒதுங்கியது. கருணாசமுத்திரமான சிவனின் பேரருளை நினைந்து நினைந்து உள்ளங்கசிந்து கண்ணீர் மல்க, பல்லக்கை விட்டு இறங்கி பாதிரிப்புலியூரில் வதியும் பார்வதி நாதனைப் பாடி பரவ, ஆலயத்தை நோக்கி ஓடினார் திருநாவுக்கரசர். அவர் கரையேறிய இடம் இன்றும் **'கரையேற விட்டகுப்பம்'** என்று அழைக்கப்படுகிறது.

கருங்கல் கடலில் மிதந்து, பல்லக்காகி, நாவுக்கரசரை கரைசேர்த்த அதிசயத்தை அறிந்த பல்லவ மன்னனின் கண் திறந்தது. சைவத்தின் பெருமையை உணர்ந்தான். சமணத்தைக் கைவிட்டான். சமணர்களை நாட்டிலிருந்து விரட்டினான். சமணப் பள்ளிகளை இடித்துத் தரை மட்டமாக்கினான். சைவ சமயத்தைத் தழுவினான். நமசிவாய நாமத்தை நாள்தோறும் பாராயணம் செய்யலானான். திருவதிகையில் தன் பெயரால் ஒரு சிவாலயத்தையும் எழுப்பினான்.

திருநாவுக்கரசர் தம் உழவாரப்படையுடன் திருக்கோயில்களைச் சீராக்கும் தொண்டு செய்ய தலயாத்திரை கிளம்பினார்.

4

பல சிவஸ்தலங்களுக்குச் சென்று முக்கண்ணனை வழிபட்டு நெக்குருகப் பதிகங்கள்

பாடினாலும் தான் சைவத்தை மறந்து சமணத்தைப் போற்றி வாழ்ந்த நாட்களின் குற்ற உணர்வு அவர் உள்ளத்தில் குறுகுறுத்துக் கொண்டிருந்தது. சமண மதத் திலிருந்த போது அவர்கள் உணவையுண்டு அவர்கள் உணர்வை மதித்து வளர்ந்த தம் உடல் மீது அவருக்கு ஒருவகை அருவருப்புத் தோன்றியது. "ஈசா இந்த இழிந்த உடலோடு உன் புகழ்பாட என் மனம் ஒப்பவில்லையே, என் செய்வேன்?" என்று உருகினார். **திருவெண்ணெய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர்** ஆகிய தலங்களுக்குச் சென்று சிவனைப் போற்றி வழிபட்டபின், **திருப் பெண்ணாகடம்** என்ற திருத்தலத்துக்கு வந்தார்.

நாளுக்கு நாள், தான் சமணனாக இருந்த குற்ற உணர்வும், சமண சமயத்திலிருந்த போது வளர்ந்த உடம்பின் மீது வெறுப்பும் அதிகரிக்கவே, அலகில் ஜோதியனான அம்பலத்தாடும் எம்பிரான் விளங்கும் பெண்ணாகடன் ஆலயத்துப் பொன்னார் மேனியனிடம் ஒரு விண்ணப்பம் விடுத்தார். "கைலயம் பதியே, என் உடல்மீது எனக்கேற்பட்டுள்ள இந்த வெறுப்பைப் போக்கி, இவ்வுடலில் உன் சின்முத்திரை களைப் பதித்தருளினால்தான் இவ்வுலகில் இவ் வுடலோடு என்னால் வாழமுடியும்" என்று நெஞ்சம் குழைய **"பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்"** என்று தொடங்கிப் பல பதிகங்களைப் பாடி **"கடவுந் திகிரி கடவா தொழியக் கயிலையுற்றான்"** என்னும் பதிகத்தோடு முடித்தார்.

அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது கைலாசபதியின் கருணையினால் அங்கு ஒரு



சிவகணம் தோன்றியது. பிறர் கண்ணில்படாத நிலையில், நாவுக்கரசர் அருகில் சென்றது. அதன் கையில் இருமுத்திரைச் சின்னங்கள் இருந்தன. இடபமும்-சூலமுமே அச்சிவச் சின்னங்கள். ஒரு தோளிலே சிவனின் வாகனமான இடபக்குறியையும் மற்றொரு தோளிலே சிவனின் ஆயுதமான சூலத்தின் குறியையும் பதித்தது. பூதகணத்தின் இச்செயல் நாவுக்கரசரின் கண்களுக்கு மட்டுமே தெரிந்தது. தன்னை சைவனாக்கி ஆட் கொண்டதல்லாமல், தன் உடலில் சிவச்சின்னங்களையும் பொறித்து உடலைப் புனிதப்படுத்திய பிறைசூடியோனின் கருணையை நினைந்து நினைந்து கண்ணீர் மல்கினார்.

பொன்னம்பலத்தாடும் பெம்மான் நடராஜனை தரிசிக்கத் **தில்லைக்கு** வந்தார். எங்குவந்தாய்? என்று கேட்ட அம்பலவாணனுக்கு **"பக்தனாய்ப்பாட மாட்டேன்"** என்ற பதிகம்பாடிப் பதிலுரைத்தார் அதன்பின் தித்திக்கும் பல திருப்பதிகங்களைப்பாடி, சபாபதிக்கு நிகர் எவருமில்லை என்று சிவனடியார்களுக்குப் போதித்து, உழவாரப்பணி புரிந்தவாறு சில காலம் சிதம்பரத்தில் தங்கினார். அப்போது உமாதேவியினால் ஞானப்பால் ஊட்டப் பட்டு, ஞானம் பெற்று, மூன்று வயதிலேயே செந்தமிழ்ப் பதிகங்கள் பாடும் சக்தியையும் அற்புதங்கள் நிகழ்த்தும் ஆற்றலும் பெற்ற திருஞான சம்பந்தப் பெருமான், சீர்காழியில் வாழ்ந்து வரும் செய்தி அறிந்து, ஆளுடைப் பிள்ளையைக் காண ஆவல் கொண்டார். அன்னம் பாவிக்கும் தில்லைச் சிற்றம்பலம் என்னும் பதிகம்பாடி கூத்தபிரானிடம்

பிரியாவிடை பெற்று, தோணியப்பரையும், ஞானசம்பந்தரையும் காண சீர்காழிக்குக் கிளம்பினார்.

ஞானசம்பந்தப் பெருமானும், நாவுக்கரசரின் சிவத்தொண்டு பற்றி அறிந்திருந்தார். சைவம் காத்து வரும் சிவனடியாரான நாவுக்கரசர், தம்மைக் காண சீர்காழி வருகிறார் என்ற தகவல் அறிந்ததும், அவரைத் தானே நேர் கொண்டு அழைக்க அன்பர்களுடன் சென்றார். நாவுக்கரசர் ஆளுடைப் பிள்ளையைக் கண்டதும் அவர் அடிகளில் விழுந்து வணங்கினார். சம்பந்தர், நாவுக்கரசரைக் கனிவோடு அணைத்துக் கொண்டு **'அப்பரே'** என்று அன்பொழுக அழைத்தார். அன்றுமுதல் அடியார்கள் நாவுக்கரசரை 'அப்பர்' என்றே அழைக்கலானார்கள்.

பின்னர் நாவுக்கரசரான அப்பரும் ஞான சம்பந்தரும் சீர்காழியிலுள்ள தோணியப்பர் ஆலயம் சென்று ஆலவாயப்பனை தரிசித்தனர். அப்பர் **'பார் கொண்டுமூடி'** என்று தொடங்கும் பதிகத்தைப் பாடிப் பக்தர்களை மகிழ்வித்தார். சிலகாலம் ஞான சம்பந்தரின் திருமடத்தில் தங்கி, ஆளுடைப் பிள்ளை யுடன் அளவளாவி மகிழ்ந்தபின், தான் சோழநாட்டுச் சிவஸ்தலங்களில் உழவாரப் பணி புரிய வேண்டு மென்று கூறி, ஞானப்பிள்ளையிடம் விடைபெற்றார்.

சோழ நாட்டில் உள்ள பல தலங்களை தரிசித்துப் பணி செய்து திருப்தியுற்ற அப்பர், **திருச்சத்திமுற்றம்** என்ற சிவஸ்தலத்துக்கு வந்தார். அப்பருக்கு அரவாணிந்த பெருமான் தன் சிவச்சின்னங்களை இரு தோள்களிலும் பதித்துத் தன்னை புனிதமாக்கியது

போலவே, ஈசன் தமது திருவடிகளைத் தன் தலைமீது பதித்து ஆசீர்வதிக்க வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. திருச்சத்தி முற்றத்தில் எழுந்தருளியுள்ள சிவக்கொழுந்தீசரிடம் தன் ஆசையைத் தெரிவித்து **"கோவாய் முடுகி"** என்னும் பதிகத்தைப் பாடினார். அப்பரின் பாடல் கேட்டுமகிழ்ந்த பரமன், அவர் விருப்பத்தை நிறைவேற்ற வேண்டும் என்ற எண்ணங் கொண்டாலும் அவர் வாயினால் மற்றுமொரு பாடல் கேட்டு மகிழவேண்டும் என்ற எண்ணத்தோடு அப்பர் பிரானிடம் "நீ நல்லூருக்கு வா-உன் ஆவலை நிறைவேற்றுகிறேன்" என்று கூறினார்.

இறைவன் கட்டளைக்கேட்டு மனமகிழ்ந்து போன அப்பர், **திருநல்லூரை** நோக்கி விரைந்தார் - இறைவனின் திருவடி தீட்சையைப் பெற. திருநல்லூர் தலத்திலுள்ள கங்காதரனைக் கண் குளிரக் கண்டார். கண்ணீர் மல்கப் பல பதிகங்களைப் பாடினார். காட்டாற்று வெள்ளம் போல அப்பரின் வாயிலிருந்து தீந்தமிழ்ப் பதிகங்கள் (பத்து) வெளிப் பட்டன, ஒவ்வொரு பாடலின் முடிவிலும் **"திருவடி என் தலைமீது வைத்தார் நல்லூர் எம்பெருமானார் நல்லவாறே"** என்று அடிகள் வருமாறு அமைத்துப் பாடினார். பத்தாவது பதிகத்தின் முடிவில் "நாவுக்கரசரே! உம் விருப்பப்படி என் திருவடிகளை உம் சிரசில் பதிக்கிறோம்". என்று கூறிய ஈசன், அவருக்கு திருவடி தீட்சை செய்வித்தார். அப்பரின் ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. பக்தர்களோ, இறைவன் தம் அடியார்களிடம் காட்டும் கருணையை எண்ணி 'ஆஹா'காரம் புரிந்தனர்.

திருநல்லூரில் சில நாள் தங்கியபின், தொடர்ந்து பலதலங்களைத் தரிசனம் செய்து கொண்டு, **திங்களூரை** நெருங்கிக் கொண்டிருந்தார் அப்பர். வழியில் ஒரு தண்ணீர்ப் பந்தல் தென்பட்டது. அதில் தொங்கிக் கொண்டிருந்த பெயர்ப் பலகையைக் கண்டவர் திகைத்தார். ஏன்? **திருநாவுக்கரசர் தண்ணீர்ப்பந்தல்** என்று அப்பலகையில் எழுதப் பட்டிருந்தது. தன்பெயரை இதற்கு யார் சூட்டியது, ஏன்? என்ற வியப்பு ஏற்படவே தண்ணீர்ப் பந்தலில் நீர் ஊற்றும் அன்பரைக் கேட்டார்.

"இந்தத் தண்ணீர்ப்பந்தலை அமைத்தவர் பெரும் செல்வந்தர். **அப்பூதி அடிகள்** என்று பெயர். திங்களூரில் தான் வசிக்கிறார். இந்தத் தண்ணீர்ப்பந்தல் மட்டுமல்ல, வேறுபல இடங்களிலும் தண்ணீர்ப் பந்தல்கள், அறச்சாலைகள், சத்திரங்கள், பூங்காக்கள், குளம், கிணறுகள் பல அமைத்து ஏழை எளியவர்களின் துயர் துடைக்கப் பாடுபடுகிறார். தம் தருமப் பணிகள் அனைத்துக்கும் திருநாவுக்கரசர் என்ற பெயரையே சூட்டி இருக்கிறார். ஏன், தம் பிள்ளைகளுள் ஒருவனுக்குக் கூட அந்தப் பெரியவரின் பெயரை வைத்திருக்கிறார். சிறந்த, சிவபக்தர். இதில் வேடிக்கை என்னவென்றால் அப்பூதிஅடிகளாரின் அன்புக்குப் பாத்திரமான அந்தத் திருநாவுக்கரசரை அவர் பார்த்ததே இல்லை. நாவுக்கரசரைப் பற்றிப் பலர் கூறும் அரிய செயல்களைக் கேட்டே அவர் மீது பக்தி கொண்டுள்ளார். அவர் மாளிகை அருகில்தான் உள்ளது" என்றார் தண்ணீர்ப் பந்தலில் பணியாற்றுபவர்.

"என்னைக் காணாமலேயே என்மீது பக்தியும் பாசமும் மதிப்பும் மரியாதையும் கொண்டுள்ள அந்த சிவபக்தரான அப்பூதி அடிகளைக் காணவேண்டும்" என்று ஊருக்குள் வேகமாக நடந்தார். அப்பூதியடி களின் இல்லத்தைக் கேட்டுத் தெரிந்து கொண்டார்.

தம் இல்லம் தேடி வரும் சிவனடியாரைக் கண்ட அப்பூதி அடிகள் "இன்று நான் பாக்கியம் செய்திருக் கிறேன். என் வீடுதேடி ஒரு சிவநேசர் வருகிறார்" என்று மனதிற்குள் மகிழ்ந்து, அவரை எதிர் கொண்டு சென்று வரவேற்றார், உபசரித்தார், குசலம் விசாரித்தார்–அவர் அப்பர் என்பதை அறியாமலேயே!

"நான் சிவஸ்தலங்களை தரிசித்துக் கொண்டு வருகிறேன். நீங்கள் அமைத்துள்ள தண்ணீர்ப் பந்தல் மற்றும் பல அறச் செயல்களைக் கண்டேன். மனமகிழ்ந்தேன். ஆனால் அவற்றுக்கெல்லாம் உங்கள் திருப்பெயரைச் சூட்டாமல், வேறு யாரோ ஒருவருடைய பெயரை வைத்திருக்கிறீர்களே, அது ஏன்?" என்று கேட்டார் நாவுக்கரசர்.

அப்பர் இப்படிக் கேட்டதும் அந்தணரான அப்பூதி அடிகள் அதிர்ந்து போனார் "சிவனடியாரே! சிவனால் தடுத்தாட் கொள்ளப்பட்டு, நாவுக்கரசர் என்று பெயர் சூட்டியவரையா 'யாரோ ஒருவர்' என்கிறீர்? கொடிய சமணர்களின் சூழ்ச்சிகளை யெல்லாம் கங்காதரனின் கருணையினால் தவிடு பொடியாக்கிய சிவநேசச் செல்வரையா 'யாரோ ஒருவர்' என்கிறீர்? அப்பரின் அளப்பறிய பெருமைகளை அறியாத நீர் என்ன சிவனடியார்?

எந்த ஊர்? உமது பெயரென்ன?" என்று கடுப்போடு கேட்டார் அப்பூதியடிகள்.

அப்பூதியடிகள் தம்மீது கொண்டுள்ள பக்தியைப் பார்த்து வியந்து போன அப்பர், தம்மை யார் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளச் சங்கடப்பட்டார். "பெரிய பெரிய வார்த்தைகளால் இவ்வளவு நேரம் குறிப்பிட்டீர்களே அந்தத் திருநாவுக்கரசு என்ற எளியவன் நான்தான்'' என்றார். அதைக்கேட்ட அப்பூதியடிகளின் நிலை எப்படி இருந்தது என்பதை எழுத வார்த்தைகளால் இயலாது. பேச நாவெழவில்லை. உடல் செயல்பட முடியாமல் தடுமாறியது. நெடுஞ்சாண் கிடையாக அப்பரின் திருவடிகளில் தன் சிரம்தோய விழுந்தார். தாங்கமுடியாத மகிழ்ச்சியோடு வீட்டினுள்ளே ஓடினார். உடனே திரும்பி வந்தார். "நாவுக்கரசுப் பெருமானே! எனக்குக் கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. உள்ளே வாருங்கள். உங்களை நிற்க வைத்தபடி ஏதேதோ பிதற்றிக் கொண்டிருக்கிறேன். நான் ஓர் அறிவிலி. ஆஹா ஆஹா! நீங்கள் என் இல்லத்துக்குவர நான் என்ன பாக்கியம் செய்தேன்!" என்று தவித்துப் போய், அப்பரை ஓர் ஆசனத்தில் அமரச் செய்து, உள்ளே ஓடித் தன் மனைவி மக்களையும் உற்றார் உறவினர்களையும் அழைத்து வந்து அவர்களுடன் மீண்டும் நாவுக்கரசரின் திருவடிகளில் விழுந்து வணங்கினார். பெருமையோடு அனைவருக்கும் அப்பர் பெருமானை அறிமுகம் செய்துவைத்து மகிழ்ந்தார். நாவுக்கரசருக்கு விருந்து தயாரிக்குமாறு தம் மனைவியிடம் கூறினார். தம்

இல்லத்தில் உணவுண்ண வேண்டுமென்று நாவுக்கரசரிடம் கேட்டுக் கொண்டார். அன்பர் அப்பூதியின் ஆர்வத்தைக் கண்டு அவர் வீட்டில் விருந் துண்ணச் சம்மதித்தார் அப்பர்.

"நான் நதியில் போய் நீராடி சிவபூஜையை முடித்துக் கொண்டு வருகிறேன். பிறகு நாமெல்லாரும் சேர்ந்து உண்போம்" என்று கூறி விடை பெற்று, ஊர்ப் புறத்தே இருந்த வாவிக்கு நீராடச் சென்றார் நாவுக்கரசர்.

அப்பூதி அடிகளின் துணைவியார், சிவநேசச் செல்வரான அப்பருக்கு விருந்து தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டிருந்தார். தம் மூத்தமகன் திருநாவுக்கரசுவை அழைத்து "சிவம் பெருக்கும் சீலர் உண்பதற்கு நம்தோட்டத்தில் போய், பெரிய தலைவாழை இலையாகப் பறித்து வா" என்று கூறி அனுப்பினார். பெற்றோரைப் போலவே சிவபக்தன் திருநாவுக்கரசு. கருக்கரிவாளுடன் தோட்டத்துக்கு ஓடினான். அப்பூதியடிகள் தம் அன்பர்களுடன் நாவுக்கரசரின் பெருமைப் பற்றியும், அவர் தம் இல்லத்துக்கு – இல்லை, தம் ஊருக்கே வந்திருக்கும் அதிர்ஷ்டத்தைப் பற்றி வாய் ஓயாமல் பேசிக் கொண்டிருந்தார். அவ்வப்போது அப்பர் நீராடி, சிவபூஜை முடித்து வருகிறாரா என்று வழியைப் பார்த்துக் கொண்டுமிருந்தார். அப்பரை வரவேற்க வந்த ஊரார் விடை பெற்றனர்.

அப்போது.....

அப்பருக்கு அமுதுபடைக்க வாழை இலை பறித்து வரத் தோட்டத்துக்குச்சென்ற அப்பூதி

அடிகளின் மகனைப் பாம்பு கடித்து விட்டது. பாம்பு கடியினால் தான் சாகப்போகிறோமே என்று அவன் க்வலைப்படவில்லை. சிவனடியார் விருந்துண்ண வாழை இலை இல்லாமல் போகுமே என்ற கவலையோடு வீட்டுக்கு ஓடினான். இலையைத் தாயிடம் கொடுத்தான். அதற்குள் பாம்பின் விஷம் தலைக்கேறியதினால் தரையில் விழுந்தான். மகனின் நிலை அறிந்து அப்பூதியடிகளின் மனைவி தவித்தாள், துடித்தாள். கணவனை அழைத்தாள், கண்ணீரும் விம்மலுமாக மகனின் மரணத்தைக் கூறினாள். "உண்மையறிந்தால் நாவுக்கரசர் உணவு கொள்ள மறுத்துவிடுவாறே" என்று உத்தமத் தம்பதி இருவரும் எண்ணினர். மகனின் இழப்பை விட நாவுக்கரசர் தங்கள் வீட்டில் சாப்பிடாமல் போவதை அவர்களால் தாங்கமுடியவில்லை. ஆகவே மகனின் மரணத்தை அப்பர் அறியக்கூடாது; முகத்தில் துக்கத்தையும் காட்டக் கூடாது என்று உறுதியோடு, மகனின் சடலத்தை ஒரு போர்வையில் சுருட்டி, உள்வீட்டின் ஒரு மூலையில் கிடத்தினார்கள். நாவுக்கரசரை வரவேற்க வாசலுக்குப் போனார்கள்.

சிவபூஜை முடித்து, திருநீறுதுலங்க அப்பர் பெருமான் அப்பூதி அடிகளின் இல்லம் நோக்கி வந்து கொண்டிருந்தார் விருந்துண்ண. அவருக்கு கால் அலம்பச் செம்பில் நீர் கொடுத்து வரவேற்றனர், அப்பூதி அடிகளும் அவர் துணைவியாரும். முகத்தில் எவ்விதச் சலனமும் இல்லை. போலியான மகிழ்ச்சியை ம்லரவிட்டபடி அடிகளாரை உள்ளே அழைத்துப் போய் ஆசனத்தில் அமரச் செய்தார்கள். அம்மையார்

தலைவாழை இலையை அப்பர் முன் பரப்பி, நீர் தெளித்து அதைத் தூய்மைப்படுத்தினார்.

"எனக்கு மட்டுமா விருந்து நீங்களும் அமருங்கள் இருவரும் சேர்ந்து உண்போம்!" என்று அப்பூதி அடிகளைத் தம் அருகில் அமரும்படி கூறினார். "உமதுமகன்-என் பெயர் கொண்டவன்-எங்கே? அவனையும் என் அருகே இந்தப் பக்கம் அமரச் சொல்லுங்கள். அம்மணி அவர்களுக்கும் இலை போடுங்கள்" என்று கேட்டுக் கொண்டார் நாவுக்கரசர்.

அப்பூதி அடிகளால் துக்கத்தை அடக்கமுடிய வில்லை. மிகுந்த பிரயாசையுடன் அழுகையைக் கட்டுப்படுத்தியபடி "அப்பர் பெருமானே... நீங்கள் உண்பதைக் கண்டு மகிழவே விரும்புகிறேன். நான் பிறகு சாப்பிடுகிறேன். என் மூத்தமகன் இப்போது இங்கில்லை!" என்றார். அவரையும் மீறி அவர் குரலில் பேதம் ஏற்பட்டது.

"இப்போது இங்கில்லையா? "நாவுக்கரசரின் மனம் சஞ்சலப்பட்டது. உள்ளத்தை ஏதோ ஒரு வேதனை கவ்வுவது போலிருந்தது "அப்பூதி அடிகளாரே! என் மனதில் இனந்தெரியாத ஒரு தடுமாற்றம் ஏற்படுகிறது. என்னிடம் நீங்கள் எதையோ மறைக்கிறீர்கள் என்ற எண்ணமும் ஏற்படுகிறது. எதுவாயினும் என்னிடம் மறைக்காமல் சொல்லுங்கள்" என்று கேட்டுக் கொண்டார். அப்போது அடுக்களையிலிருந்து அடிகளாரின் துணைவியாருடைய விம்மல் ஒலி வெளிப்பட்டது.

தாயுள்ளமல்லவா? மகனை இழந்த வேதனையை அவளால் அதற்கு மேல் கட்டுப்படுத்த முடியவில்லை.

சட்டென்று இலை முன்னிருந்து எழுந்து விட்டார் நாவுக்கரசர். "ஏதோ விபரீதம் நிகழ்ந்துள்ளது... கூறுங்கள்" என்று அப்பூதியின் தோள்களைப் பற்றிக் குலுக்கினார் அப்பர். அதற்கு மேலும் கட்டுப்படுத்தத் திராணி இல்லாத அப்பூதி அடிகள், கோவென்று கதறினார். தோட்டத்தில் தன் மகனைப் பாம்பு கடித்த விஷயத்தைக் கூறினார். "என் மகன் இறந்ததை அறிந்தால் நீங்கள் இங்கே உணவருந்த மாட்டீர்களே என்றுதான் அந்த விஷயத்தை மறைத்தோம். அதற்காக எங்களை மன்னித்தருள வேண்டும்" என்று அப்பரின் திருவடிகளில் துவண்டு விழுந்தார்.

உடல்பதற, நெஞ்சு துடிக்க அப்பூதியைத் தம் இருகைகளாலும் தூக்கி அணைத்துக் கொண்ட நாவுக்கரசர் "அன்பரே! நீங்கள் என் மீது வைத்துள்ள பக்தியும் பாசமும் நேசமும் என் நெஞ்சை நெகிழ வைக்கிறது. நான் உணவருந்த வேண்டும் என்பதற்காக, அருமை மகனின் மரணச் செய்தியையும் மறைத்து மனதைக் கல்லாக்கிக் கொண்டீர்களே! அது சரியல்ல" என்று அவர் கண்ணீரைத் துடைத்து "மகனின் சடலத்தை ஆலய வாயிலுக்குக் கொண்டு வாருங்கள். அந்த நாதன் முடி மேலிருக்கும் நல்ல பாம்பிடமே ஞாயம் கேட்கிறேன். உம் மகனின் உயிரைப் பறித்தது ஞாயமா என்று" – உணர்ச்சிவயப்பட்ட நாவுக்கரசர் திங்களூர் ஆலயத்துக்குச் சென்றார். அப்பூதியடிகளும் அவர் துணைவியாரும் உயிர்நீத்த மகனின்

சடலத்துடன் அவரைப் பின் தொடர்ந்தனர். இதற்குள் விஷயம் காட்டுத்தீபோல ஊரில் பரவ, உற்றாரும், உறவினரும், ஊராரும் பதைப்புடன் ஆலயத்தின் அருகே வந்து கூடினர்.

விஷமுண்ட நீலகண்டனிடம், அப்பூதியாரின் மகனுடைய விஷக்கடிமரணத்திலிருந்து விடுவித்து உயிர்ப்பித்தருளுமாறு இறைஞ்சிப் பாடலானார் **"ஒன்று கொலாமவர் சிந்தையுயர்வரை"** என்று ஆரம்பித்து, பாம்பணிந்த பரமேஸ்வரனின் மீது பத்துப்பதிகங்கள் பாடினார். பத்தாவது பதிகத்தை பாடி முடித்ததும், அப்பூதி அடிகளாரின் அரவு தீண்டி இறந்த மகன்–உறக்கம் விட்டு எழுபவன்போல எழுந்தான் கண்களைக் கசக்கியபடி சுற்றுமுற்றும் பார்த்தான். எதிரே நாவுக்கரசரையும் தந்தையையும், தாயையும், உறவினரையும் கண்டான். ஓடிப் போய் அப்பரின் திருவடிகளில் விழுந்து வணங்கினான். நாவுக்கரசர் தன் பேர் கொண்ட பாலகனை அள்ளி எடுத்து அணைத்துக் கொண்டார். இறைவன் அருளால் உயிர் மீண்ட அவன் உடலில் திருநீறுபூசி வாழ்த்தினார். கூடி இருந்தோர் நாவுக்கரசரின் தெய்வத் தன்மையைக் கண்டு வியந்தனர்–புகழ்ந்தனர்.

உயிர் பிழைத்த மகனுடன் அப்பூதியடிகள் நாவுக்கரசரைத் தம் இல்லத்துக்கு அழைத்துப் போய் அமுது படைத்து மகிழ்ந்தார். பிறகு சில நாள் திங்களூரில் தங்கியபின், அப்பூதியடிகளுடன் சிவத் தல யாத்திரையைத் தொடர்ந்தார். திருப்பழணத்தில் கோயில் கொண்டுள்ள சிவபெருமானைப் பாடிப் பரவிய பதிகங்களில் அப்பூதியடிகளின் புகழைக் கூறி

இருக்கிறார் அப்பர். பல தலங்களில் உழவாரப்பணி செய்து கைலைநாதனின் புகழ்பாடிக் களித்து **திருவாரூருக்கு** வந்தார். அங்கு குடிகொண்டுள்ள வீதிவிடங்கப்பெருமான் மீது பக்திரசம் சொட்டும் பத்துப் பதிகங்களைப் பாடினார். திருவாதிரைத் திருநாளின்போது பாடியதினால் அப்பதிகங்கள் **'திருவாதிரைத் திருப்பதிகங்கள்'** என்றழைக்கப்படு கின்றன. மேலும் பல சிவாலயங்களைக் கண்டு வழிபட்ட அவர், **திருப்புகலூரில்** ஞானசம்பந்தர் தங்கி இருப்பதை அறிந்து ஆளுடைப்பிள்ளையைக் கண்டு அளவளாவி ஆனந்திக்க திருப்புகலூருக்குச் சென்றார். இரண்டு சிவநேசர்களும் ஒருவரை ஒருவர் வரவேற்று மகிழ்ச்சியுற்றனர். திருப்புகலூரிலுள்ள முருக நாயனாரின் சிவமடத்தில் அப்பரும் சம்பந்தரும் தங்கினார்கள். இவர்களைக் கண்டு ஆசிபெற நீலநக்கர் சிறுத்தொண்டர் ஆகிய சிவனடியார்கள் திருப்புக லூருக்கு வந்தார்கள் சிவனடியார்கள் கூட்டம் சிவ வழிபாட்டில் திளைத்து மகிழ்ந்தது.

அப்பரும்-சம்பந்தரும் இணைந்தே பல தலங்களுக்கு யாத்திரை செய்தார்கள். யமனைக் காலால் உதைத்து, தன்னைத் தஞ்சமடைந்த பாலனான மார்க்கண்டேயன் வாழ்ந்த **திருக்கடவூர்** சென்றனர். அங்கு வசித்து வந்தார் சிவநெறித் தொண்டர் குங்கிலியக் கலயநாயனார் என்பவர். அப்பரும் சம்பந்தரும் தம் ஊருக்கு வருகை தருவதைக் கேள்விப்பட்டு, அவர்களை எதிர் கொண்டு அழைத்து வந்தார் குங்கிலியக் கலையர். அனைவரும் திருக்கடவூர் வாழ் சிவனான அமுதீசரையும் அபிராமி

அம்பிகையையும் வணங்கிப் பதிகங்கள் பாடிப் பரவினார்கள். பிறகு குங்கிலியக் கலையனாரின் இல்லத்தில் உணவருந்தி, இரவு தங்கி, மறுநாள் திருவீழிமிழலையை அடைந்தார்கள் அப்பரும் சம்பந்தரும்.

திருவீழிமிழலைப் பிராந்தியத்தில் அப்போது பஞ்சம் தாண்டவமாடியது. வானம் பொய்த்துக் காவிரி வறண்டது. ஏழை எளிய மக்கள் உணவுப் பொருள் வாங்கப் பொருளின்றிப் பட்டினி கிடக்கலானார்கள். இதை அறிந்த சிவநேசச் செல்வர்களான இவ்விருவரும் இறைவனை இறைஞ்ச, அவர் இவர்கள் கனவில் தோன்றி, "ஆலயத்தில் மேற்கு வாயில் படியிலும், கிழக்குவாயில் படியிலும் தினமும் ஒரு பொற்காசு இருக்கும். அதைக் கொண்டு உங்கள் தொண்டர்களின் பசியாற்றி மகிழுங்கள்" என்றார். அதேபோல தினமும் கிழக்கு வாயிலிலும், மேற்கு வாயிலிலும் ஒவ்வொரு பொற்காசுகள் பொன்னாற் மேனியனின் கருணையினால் காணப்பட்டது. வாயில்படிகளில் வைக்கப் பட்டதினால் இதைப் படிக்காசு என்றழைத்தனர்.

அப்பரும்-சம்பந்தரும் ஆண்டவன் அளித்த படிக்காசை-பொற்காசை-விற்று அதில் கிடைத்த பொருளைக் கொண்டு உணவுப் பண்டங்கள் வாங்கிவரச் செய்து ஏழை எளியவர்களுக்கும், சிவனடியார்களுக்கும் வயிறார உணவு படைக்கச் செய்தனர். அப்பரும், சம்பந்தரும் உணவளிக்கும் செய்தி கேட்டு பஞ்சத்தில் அடிபட்ட மக்களெல்லாம் திருவீழிமிழலைக்கு வந்து பசிதீர உண்டு இவர்களை

வாழ்த்தினர். பஞ்சம் விலகி, மழைபெய்து நாடு செழிப்பாகும் வரை ஈசனே படிக்காசு அளித்தான். அப்பரும் ஆளுடைப்பிள்ளையும் மக்களின் வயிறு குளிர அன்னதானம் செய்தனர்.

பஞ்சம் பறந்தோடியபின் இருவரும் **வேதாரண்யம்** வந்தனர். அப்போது அத்தலத்துக்கு **திருமறைக்காடு** என்று பெயர். அவ்வூரின் பிரதான நுழைவாயிலின் பெருங்கதவு மூடிக் கிடந்தது. அதை யாராலும் திறக்க முடியவில்லை. வேதங்களால் பூஜிக்கப்பட்டு அடைக்கப்பட்டிருந்ததினால், சாதாரண மனிதர்களால் அதைத் திறக்க இயலவில்லை. ஆகவே மதிற்சுவரை இடித்து, ஒருசிறிய நுழைவாயிலை உருவாக்கி, அதன்மூலம் மக்கள் ஆலயத்துக்குச் சென்று ஆண்டவனை வழிபட்டு வந்தனர். இத்தகவல்களை அறிந்த அப்பரும் சம்பந்தரும் — திறவா நெடுங்கதவைத் திறக்கச் செய்து அதன் வழியாகவே ஆலயத்தில் நுழைந்து ஈசனைத் தரிசிக்க வேண்டும் என்று எண்ணினர். சம்பந்தர் கதவு திறக்குமாறு இறைவனை வேண்டிப் பதிகம்பாடுமாறு அப்பரிடம் கேட்டுக்கொண்டார்.

நாவுக்கரசர் அதன்படியே **'பண்ணினேன் மொழியாள்'** என்று தொடங்கி **'கண்ணினால் உமைக்காணக் கதவினைத் ததிண்ணமாய்த் திறந்தருள் செய்மினே'** என்று உள்ளம் உருகப் பாடினார் அந்த நெடுங்கதவு அசைந்து கொடுக்கவில்லை. 'உமக்கு இரக்கமில்லையா?' என்று கேட்டு **'இரக்க மொன்றிலிர்'** என்னும் பதிகத்தைப் பாடினார். உடனே கதவு படீரென்று ,திறந்து கொண்டது. கூடி இருந்தோர்

மகிழ்ச்சி ஆரவாரமிட்டனர். அடியார்கள் இருவரும் திறந்த நெடுங்கதவின் வழியாக ஆலயத்தினுள் சென்று, தொழுவாருக்கு இரங்கி அருள் செய்யும் – செழுநீர் புனல் கங்கையைச் சென்னியில் கொண்ட தீவண்ணனை, வணங்கி துதித்துப்பாடி மகிழ்ந்தனர். ஆண்டவனிடம் விடைபெற்று வெளியே வந்ததும் அப்பர் "இனி இக்கதவு, மற்ற எல்லா ஆலயக் கதவுகளையும் போல இலகுவாகத் திறக்கவும் மூடவும் வகை செய்யவேண்டும். இப்போது இப்பெரும் கதவை மூடும்படி இறைவனைத் துதித்துப் பாருங்கள்" என்று சம்பந்தனாரை வேண்டிக்கொண்டார். சம்பந்தரும் **'சதுரம் மறைதான்'** என்ற பதிகத்தைப் பாட திறக்கப் பட்டக் கதவு மூடிக் கொண்டது. "இனி இந்த நெடுங்கதவை யாரும் எளிதாகத் திறக்கவும் மூடவும் செய்யலாம்" என்று கூறித் தாங்கள் தங்கியுள்ள திருமடத்துக்குச் சென்றனர், அப்பரும் ஆளுடைப் பிள்ளையும். அன்றுமுதல் திருமறைக்காட்டு ஆலய நெடுங்கதவை இலகுவாகத் திறக்கவும் அடைக்கவும் முடிந்தது.

அப்போது பாண்டி நாட்டிலிருந்து திருஞான சம்பந்தருக்கு அழைப்பு வந்தது. பாண்டிய மன்னன் சமணர்களின் பிடியில் சிக்கி சைவத்தை மறந்திருந்தான். பாண்டிமாதேவி மங்கையர்க்கரசி யாரும், மந்திரி குலச்சிறையாரும் மன்னனையும் நாட்டையும் சமணப் பிடியிலிருந்து விடுவிக்க சம்பந்தரால் மட்டுமே முடியும் என்று கருதி அவருக்கு அழைப்பு விடுத்தனர். ஆளுடைப் பிள்ளை குலச்சிறையாரின் அழைப்பை ஏற்று பாண்டிநாடு செல்லச் சித்தமானார்.

இதை அறிந்த அப்பர் "சம்பந்தப்பிரானே! சமணர்கள் சாமானியர்கள் அல்லர். இளமையில் நான் அவர்கள் பிடியில் சிக்கித்தவித்து மீண்டவன். அவர்கள் மந்திரதந்திரங்களை நான் நன்கு அறிவேன். நீங்கள் போக வேண்டாம் - நான் போகிறேன்" என்றார். ஆனால் ஆளுடைப்பிள்ளை அதற்கு இணங்கவில்லை. "விரிசடை வேணியன் நம் பக்கமிருக்கும்போது சமணர்களுக்கு நாம் பயப்படுவானேன்? நானே செல்கிறேன். அவர்களை வெற்றிக் கொண்டு பாண்டி மன்னனை மீண்டும் சைவனாக்கித் திரும்புவேன் எனக்கு விடை கொடுங்கள்" என்றார்.

"இன்று நாளும் கோளும் கூடச் சரி இல்லையே. ஆகவே மதுரைப் பயணம் வேண்டாம்" என்றார் அப்பர். அதைக் கேட்ட ஆளுடைப் பிள்ளை **"வேயுறு தோளி பயகன் விடமுண்ட கண்டன்"** என்று தொடங்கும் 'கோளறு பதிக'த்தைப் பாடினார். "என் சிந்தையில் சிவன் குடிகொண்டிருக்கும் போது ஒன்பது கிரகங்களும் என்னை ஏதும் செய்யாது. கவலையில்லாமல் எனக்கு விடை தாருங்கள்" என்றார் சம்பந்தர். அப்பருக்கோ, சம்பந்தரைத் தனியே சமணர்களிடம் அனுப்ப மனமே இல்லை. ஆனால் சம்பந்தரின் உறுதியின் முன் அப்பரால் ஏதும் செய்யமுடியவில்லை. ஆளுடைப்பிள்ளைக்குப் பிரியா விடை கொடுத்தார். ஞானசம்பந்தர், சமணர்களின் கொட்டத்தை அடக்கி அவர்களைக் கழுவிலேற்ற மதுரைக்குக் கிளம்பினார்.

5

ஞானப் பிள்ளையைப் பாண்டிநாட்டுக்கு அனுப்பிவிட்டு, அப்பர் தன் சிவத்தல யாத்திரையை தொடர்ந்தார். **திருநாகைக்காரோணம், திருவாவடு துறை** முதலிய தலங்களில் உள்ள தயாநிதியான இறைவனை தரிசித்து உள்ளம் உருகப்பாடி வழிபட்டு, **திருப்பழையாறை** என்னும் தலத்துக்கு வந்தார். அங்கு சிவனுக்கு என்று ஆலயம் இல்லாததைக் கண்டு வியப்புற்றார்: சோழவள நாட்டில் அலகில் சோதியனுக்கு ஆலயம் இல்லாதிருப்பது அதிசயமாக இருந்தது. ஆனால் அங்கிருந்த ஒரு சமணப் பள்ளியைக் கண்டதும் அவரை அறியாமலேயே அவரது கைகள் சிரமேற் சென்றன. "நான் சமணத்தை விட்டொழித்துப் பல காலமாயிற்றே, ஏன் என்னை அறியாமல் என் மனம் குதூகலமடைகிறது. மனம் சிவனைப் பாடத் துடிக்கிறது. கைகளோ சமணப்பள்ளியை நோக்கி வணங்குகிறது. இது என்ன விந்தை" என்றெண்ணி அவ்வூரிலுள்ளவர்களிடம், இவ்வூரில் சிவாலயம் ஏதுமில்லையா என்று வினவினார். அவர்கள் கூறிய பதில் தன்னையறியாமல் தன் கரங்கள் சமணப் பள்ளி கண்டு தலைமேல் உயர்ந்ததின் ரகசியம் தெரிந்தது.

அந்த சமணப்பள்ளி ஒருகாலத்தில் சிவாலயமே. சமணர்களின் ஆதிக்கத்தில் சிவாலயத்தின் கோபுரத்தை மறைத்து பொய்யான ஒரு விமானத்தை உருவாக்கி சமணப்பள்ளி விமானம் போன்ற தோற்றத்தை உண்டாக்கிவிட்டார்கள். "இக்கொடுமை

எப்போது ஒழியுமோ தெரியவில்லை" என்று ஊரார் வேதனைப் பட்டார்கள். "மன்னனின் ஆதரவு பெற்றுச் சமணர்கள் செய்யும் அட்டூழியங்களுக்கு எல்லையே இல்லையா. ஈசா இதென்ன கொடுமை? உன்னையே ஒளித்து வைத்துள்ளார்களே. இதை நீ எப்படி சகித்துக் கொண்டிருக்கிறாய்? உன்னை இவ்வூரில் கண்டு களிக்காமல் நான் இங்கிருந்து நகரமாட்டேன். உணவுண்ண மாட்டேன், உறங்கவும் மாட்டேன்" என்று கூறி **வடதளி** என்றழைக்கப்பட்ட, சமணர் பள்ளியாகக் காட்சி அளித்த சிவாலயத்தின் முன் அமர்ந்து விட்டார்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நீலகண்டப் பெருமான் அன்றிரவு பழையாறை மன்னனின் கனவில் தோன்றினார். "மன்னா உன் ஊரில் என் கோயில் இல்லாததைக் கண்டு நீ கவலைப்படவில்லை. ஆனால் என் தொண்டன் நாவுக்கரசன், 'சமணர்களால் மறைக்கப்பட்டுள்ள என் இருப்பிடத்தை வெளிப்படுத்தாமல் நகரப் போவதில்லை' என்று சத்தியாக்கிரகம் செய்கிறான். என் படிமத்தை வடதளியில் சமணர்கள் ஒளித்து வைத்துள்ளனர். அந்தச் சிவலிங்கத்தை அவர்களிடமிருந்து மீட்டுக் கருவறையில் பிரதிஷ்டை செய். சமணர்களை இங்கிருந்து விரட்டு. நீயும் சைவத்தைப் பின்பற்று. உண்ணா–உறங்கா நோன்பிருக்கும் அப்பர் அடிகளின் உயிரைக்காப்பாற்று" என்று கூறி சிவலிங்கம் இருக்குமிடத்தையும் மன்னனுக்கு அடையாளம் காட்டி மறைந்தார்.

கண் விழித்த மன்னன், தனது மந்திரி பிரதானிகளுடன் அப்பர் அமர்ந்திருக்கும் இடத்துக்கு ஓடினான். அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். கனவில் கடவுள் தோன்றிக் கட்டளையிட்டதையும் கண்ணீர் மல்கக் கூறினான். மறைத்து வைக்கப் பட்டிருந்த சிவலிங்கத்தை வெளிக் கொணரச் செய்தான். நாவுக்கரசரின் திருக்கரத்தாலேயே அதைக் கருவறையில் பிரதிஷ்டை செய்விக்கும்படி செய்தான். திருத்தல வழிபாட்டுக்கு நியமங்களை வாரி வழங்கினான். சமணர்களை ஊரைவிட்டே விரட்டினான். நாவுக்கரசரிடம் திருநீறு வாங்கித் தரித்துக் கொண்டு 'சிவாயநம' என்னும் திருநாமத்தையும் அவரிடம் உபதேசம் பெற்று சைவனானான்.

புதையுண்டு கிடந்த பொன்னார் மேனியனை வெளிக் கொணர்ந்து சிவாலயம் அமைக்கத் தன்னைக் கருவியாக்கிக் கொண்ட முக்கண்ணனின் கருணையை எண்ணி உருகினார் அப்பர். பதிகங்கள் பல பாடி வழிபட்டு ஈசனை நினைந்து மருகினார். பலநாள் பழையாறையில் தங்கிய பின் காவிரிக்கரை ஓரமாக உள்ள சிவஸ்தலங்களான **தீவானைக் கோயில், திருவெறும்பூர், சிராப்பள்ளி, திருப்பராய்த்துறை** போன்ற தலங்களுக்குச் சென்று ஈசனை வணங்கி, ஆலயங்களைத் துப்புறவு செய்து மகிழ்ந்தார்.

திருப்பைஞ்ஞீலி என்னும் திருத்தலத்துக்குக் கிளம்பினார் அப்பர். அவ்வூருக்குச் செல்லச் சரியான பாதையில்லை. கல்லும் முள்ளும் நிறைந்த காட்டுப்பாதை. தாகம் தணித்துக் கொள்ளத் தடாகம் கூட இல்லை. பசிவேறு வாட்டியது. தனது அடியார்


படும் துன்பங்கண்டு இறைவன் மனம் கசிந்தார். வழியில் ஒரு வாவியையும் சோலையையும் உருவாக்கினார். தானே ஒரு வழிப்போக்கன். போல வேடந்தாங்கி, கட்டுச் சோற்றுடன் அந்தச் சோலையின் வாவிக் கரையில் அப்பரை வரவேற்கக் காத்திருந்தார்.

பொட்டல் காட்டில் பசு ்சோலையைக் கண்டதும் களைப்பெல்லாம் மறைய "என் அப்பனின் கருணையே கருணை! சோலையின் நிழல் எவ்வளவு இதமாக இருக்கிறது" என்று கூறியபடித் தள்ளாடி நடந்து ஒரு மரத்தடியை நாடிச் சென்றார் அப்பர்.

"சிவனடியாரே! இப்படி வாரும். வெகு தொலைவிலிருந்து வருகிறீர் போலத் தெரிகிறது" என்று குரல் கொடுத்தார் சிவபெருமான்.

"ஆம் ஐயா! சிவாலயங்களைத் தேடித்தேடிப் போய்க் கொண்டிருக்கிறேன். களைப்பும் பசியும் என் பயணத்தைத் தடைப் படுத்துமோ என்று பயந்தேன். தயாபரன் என் துன்பம் துடைக்க இக்குளிர்ச் சோலையையும் குளத்தையும் எனக்குக் காட்டி அருளி இருக்கிறான்..."

"என்னிடம் கட்டுச்சோறு உள்ளது. பசியாறலாம் வாருங்கள்" என்று கூறி வழிப்போக்கராக வந்திருக்கும் இறைவன், அப்பருக்குத் தன் கையாலேயே கட்டுச் சோற்றைக் கொடுத்தார். நாவுக்கரசர் அகமகிழ்ந்து அந்த அந்தண வழிப்போக்கருக்குத் தன் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ஈசன் கொடுத்த உணவை உண்டு பசியாறினார்.



"நீங்கள் எதுவரை போகிறீர்கள்?" என்று வினவினார் வழிப்போக்கர் அப்பரிடம்.


"திருப்பைஞ்ஞீலியில் உறையும் சிவனைத் தரிசிக்கவே போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார் அப்பர். "நானும் அங்குதான் போகிறேன் வாரும் போகலாம்" என்று வழிப்போக்கன் வடிவிலிருந்த இறைவன் கிளம்ப, நாவுக்கரசரும் கிளம்பினார். திருப்பைஞ்ஞீலியை அடைந்து அவ்வூர் ஆலயத்தை நெருங்கும் வேளையில், உடன் வந்த வழிப்போக்கர் மாயமாக மறைந்ததையும் ஒருஜோதி கோயிலினுள் சென்று மறைந்ததையும் கண்டார். நடந்த உண்மை பளீரென்று விளங்கியது. தன் களைப்பையும் பசியையும் போக்க இறைவனே வழியில் சோலையையும் வாவியையும் உருவாக்கி, வழிப்போக்கனாகக் கட்டுச் சோற்று மூட்டையுடன் காத்திருந்த அவர் கருணையை நினைந்து நெக்குருகிப் போனார். "ஈசா! எனக்காகக் கட்டுச்சோறு சுமந்தாயே!" என்று கண்ணீர் மல்கினார். ஆலயத்துள் சென்று இறைவன் சந்நிதியில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து வணங்கினார். பதிகங்கள் பல பாடி மனநிறைவெய்தினார். பலநாள் அங்கு தங்கி சிவத் தொண்டு செய்தார். இன்றும் அப்பருக்கு ஆண்டவன் கட்டுச்சோறு வழங்கியதை நினைவு படுத்தும் 'அப்பர் கட்டமுது விழா'வை அங்குக் கொண்டாடி மகிழ்கிறார்கள்.

அப்பர் மீண்டும் தன் சிவத்தல யாத்திரையை மேற்கொண்டார். திருவண்ணாமலை, காஞ்சி, திருக்கழுக்குன்றம், திருவான்மியூர், திருமயிலை,

திருவொற்றியூர், திருப்பாகர், திருவலங்காடு திருக்காரிக்கரை ஆகிய சிவத்தலங்களை தரிசித்து செந்தமிழ்ப் பாமாலைகளால் பரமனை அலங்கரித்து மகிழ்ந்தார். அதன்பின் **தென்கயிலை** என்று வழங்கும் **திருக்காளத்திக்குச்** சென்று, தன் கண்களையே அர்ப்பணித்து வழிபட்ட குடுமித்தேவரையும் கண்ணப்பரையும் தரிசித்துப் பதிகங்கள் பாடிப் பரவச மானார்.

தென் கயிலை நாதரை வழிபட்டபோது நாவுக்கரசருக்கு ஓர் ஆசை தோன்றியது. வடக்கே இமயமலையில் குடிகொண்டிருக்கும் திருக்கைலாய மலைவாழ் சிவனைக் காண வேண்டும் என்பதே அந்த ஆசை. அடியார் குழாத்துடன் திருக்கைலாய யாத்திரைக்குக் கிளம்பிவிட்டார். இன்று போல பயண வசதிகள் கிடையாது அப்போது. பல மாதங்கள் பல கஷ்டங்களுக்கிடையே வழிநடந்து காசியை அடைந்தார். விசுவநாதரையும் அன்னபூரணியையும் வணங்கி வழிபட்டு, கைலைமலைமீது ஏறலானார். உடன் வந்தவர்கள் தங்களால் இனி தொடர்ந்து பயணப்பட இயலாது என்று கூறி வாரணாசியிலேயே தங்கி விட்டனர்.

ஈசனை இதயத்தில் இருத்திக் கொண்டு நாவுக்கரசர் தன்னந் தனியே பனிமலை மீது ஏறி, திருக்கைலாயத்தைக் காண வேண்டும் என்ற வெறியோடு முன்னேறினார். உள்ளத்திலிருந்த பலம் உடலுக்கில்லை. இரவு பகல் பாராது, வெயில், பனி மழையைக் கண்டு அஞ்சாமல், பசிமறந்து கல்லும் முள்ளும் உடலிலும், பாதங்களிலும் உண்டாக்கிய



புண்களை லட்சியம் செய்யாமல் மேலே மேலே போய்க் கொண்டிருந்தார். நடக்க இயலாத நிலையில், மார்பினால் தவழ்ந்தபடி செல்லலானார். உடலின் தசைகள் ரணமாகி எலும்புகள் தேயலாயின. அந்த நிலையிலும் அப்பர் தன் யாத்திரையை நிறுத்தவில்லை. அவரது மனோதிடத்தையும் உறுதியையும் கண்டு மகிழ்ந்து மனமிரங்கிய கைலைநாதன் அவரைத் தடுத்தாட் கொள்ளத் திருவுளம் கொண்டார். தவமுனிவர் உருவில் அப்பர் முன் தோன்றினார்.

"சிவனடியாரே எலும்பு தேய இப்படி ஊர்ந்தபடி எங்கு செல்கிறீர்?" என்று கேட்டார் நாவுக்கரசரிடம்

"பிறைசூடிய பெம்மானை-கைலைவாழ் சிவனைக் காணப் போய்க் கொண்டிருக்கிறேன்" என்றார் அப்பர்.

"தேவர்களாலும் அணுகமுடியாத இடமாயிற்றே அது? உம்மால் அங்கு போக முடியாது. நீர் திரும்பிச் செல்வதே உத்தமம்"


"என் சிந்தையில் நிறைந்த சிவன் என் எண்ணத்தை ஈடேற்றி வைப்பான். இம்முயற்சியில் நான் இறந்தாலும் சரி, கைலாயம் செல்வதைக் கைவிட மாட்டேன்."

அப்பரின் உறுதியை அறிந்த ஈசன்–முனிவர்– மறைந்தார். "நாவுக்கரசே! எழுந்திடும்" என்ற அசரீரி ஒலித்தது. அப்போது தான் தன்னுடன் பேசிய முனிவர் கைலாச நாதனே என்பதை அறிந்தார் அப்பர். உடல் சிலிர்த்து காயங்கள் மறைந்தன. உடலில் புதிய தெம்பு பிறந்தது. அசரீரி தொடர்ந்தது "இதோ அங்குள்ள

தடாகத்தில் மூழ்கி எழும். என் திருக்கைலாயக் காட்சியை- மலையத்துவஜன் மகள் உமாதேவியுடன் கைலாயத்தில் வீற்றிருக்கும் காட்சியை -- உமக்கு **திருவையாறு** தலத்தில் காட்டுவோம்."

அப்பர் ஈசன் கூறிய வாவியில் மூழ்கினார்-எழுந்தபோது சோழவள நாட்டிலுள்ள திருவையாறு என்ற தலத்தில் உள்ள குளத்தில் நிற்பதைக் கண்டார். இறைவனின் கருணையை எண்ணி மனம் உருகினார். ஐயாறப்பனின் ஆலயம் சென்று இறைவனை வழிபட்டார். நஞ்சுண்ட கண்டன் திருக்கைலாயக் காட்சியை அப்பருக்குக் காட்டி அருளினார். **"வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி"** என்ற பதிகம்பாடித் துதித்தார். மேலும் பல தேவாரங்களைப் பாடி மகிழ்ந்தார்.

திருவையாற்றிலிருந்து பல சிவத்தலங்களைத் தரிசித்தவாறு **திருப்பூந்துருத்திக்கு** வந்தார். அங்கு சிவனடியார்கள் தங்க ஒரு மடத்தைக் கட்டினார். பல தேவாரத் திருப்பதிகங்களைப் பாடி சிவமேனிக்கு அலங்கரித்து அகம் குளிர்ந்தார். அப்போது ஆளுடைப் பிள்ளையார் மதுரையில் சமணர்களை வென்று வெற்றிக் கொடி நாட்டிவிட்டு சோழ நாட்டுக்குத் திரும்பிக் கொண்டிருப்பதைக் கேள்விப்பட்டார் அப்பர். நீண்ட நாள் பிரிவிற்குப் பின் ஞானசம்பந்தப் பெருமானைக் காண வேண்டுமென்ற அவா ஏற்பட்டது அப்பருக்கு. அதேபோல ஞானப் பிள்ளையும் அப்பரடிகளைக் காணும் ஆவலுற்றார். அவர் தங்கி இருக்கும் திருப்பூந்துருத்திக்குப் பல்லக்கை விடுமாறு பணித்தார். ஆளுடைப் பிள்ளையை எதிர்



கொள்ள விரைந்த நாவுக்கரசர், தொண்டர்குழாம் சூழ சிவிகை வருவதைக் கண்டு, ஞானக்குழந்தையின் பல்லக்கைத் தாமும் சுமக்க வேண்டும் என்று கருதி, கூட்டத்தில் யாரும் அறியா வண்ணம் புகுந்து, ஒரு பல்லக்குத் தூக்கியை நகருமாறு கூறி அவன் இடத்தில் தன் தோளைக் கொடுத்து பல்லக்கைச் சுமந்து வரலானார். இது சம்பந்தருக்குத் தெரியாது.

ஊருக்குள் பல்லக்கு வந்ததும் "அப்பரடிகள் எங்கிருக்கிறார்கள்?" என்று கேட்டார் சம்பந்தர்.

"அடியேன் இதோ இங்கிருக்கிறேன்!" என்று குரல் கொடுத்தார் நாவுக்கரசர். தம் பல்லக்குத் தூக்கியாக அப்பரைக் கண்ட ஆளுடைப் பிள்ளை அதிர்ந்து போனார். உடனே பல்லக்கிலிருந்து குதித்து "இப்படிச் செய்யலாமா?" என்று அடிகளைத் தழுவிக் கொண்டு கண் கலங்கினார். "இந்த பாக்கியம் எளிதாகக் கிடைக்கக் கூடியதில்லையே!" என்றார் அப்பர். பிறகு இருவரும் தாங்கள் தரிசித்த சிவத்தலங்களைப் பற்றிய தகவல்களை மாறி மாறி அளவளாவினர்.

அப்பருக்குப் பாண்டி நாட்டில் உள்ள சிவாலயங்களுக்குச் சென்று இறைவனை தரிசித்து உழவாரப்பணி புரிய ஆசை ஏற்பட்டது. சிலநாளில் சம்பந்தரிடம் விடை பெற்றுப் பாண்டி நாட்டு யாத்திரையை மேற்கொண்டார். பல பாண்டி நாட்டுத் தலங்களைக் கண்டு மகிழ்ந்து **திருப்பூவணம்** வந்தார். அங்கு ஈசனே நேரில் தோன்றி, அப்பருக்குக் காட்சி தந்தார். **"வடிவேலு திரிசூலம் தோன்றும் தோன்றும்"**

என்னும் திருத்தாண்டகத்தைப் பாடினார். பின் பல்வேறு பாண்டிநாட்டு சிவத்தலங்களைத் தரிசித்து மீண்டும் சோழ நாடு திரும்பினார்.

திருப்புகலூரில் தங்கி இருந்த போது ஈசன் அப்பரைச் சோதிக்க விரும்பி, அவர் உழவாரப்பணி செய்யும் போது நிலத்திலிருந்து பொன்னும், நவமணிகளும் வெளிப்படுமாறு செய்தார். அப்பர் பெருமானோ அவற்றைத் துச்சமாகக் கருதி, குப்பை கூளங்களைப்போல் வீசியெறிந்தார். செல்வத்தில் இச்சையற்ற நாவுக்கரசரின் தன்மை கண்டு வானோரும் வையத்துறைவோரும் போற்றிப் புகழ்ந்தனர்.

பற்று அற்றுப் பணி செய்த அப்பர், உடல் தளர்ந்து போனார். உலக வாழ்வில் சலிப்பு ஏற்பட்டது. தீவண்ணனின் திருவடி நிழலை அடைந்து பிறவாப் பெருவாழ்வைப் பெற எண்ணினார். திருப்புகலூர் அண்ணலிடம் தன் விருப்பைக் கூறி வேண்டிக் கொண்டார். அடிகளாரின் வேண்டுகோளை இறைவன் ஏற்றுக் கொண்டார். ஒரு சித்திரை மாதத்து சதய நட்சத்திரத்தில் அப்பர் பெருமானைத் தம் திருவடி நிழலில் சேர்த்துக் கொண்டார்.

சைவ நெறி தழைக்க அப்பர் ஆற்றிய பணியை உலகம் ஒருநாளும் மறக்காது.

திருச்சிற்றம்பலம்

திருநாவுக்கரசர் வாக்கு

திருவதிகை வீரட்டானம்

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமை பல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

இந்த நோய் எமன் ஆகி இருக்கிறது; இத்துன் பத்தை நீக்கவில்லையே! நான் என்ன கொடுமைகள் செய்தேன்? எனக்குத் தெரியவில்லை. எருதை வாகன மாக உடையவனே! உன் திருவடிகளை இரவும் பகலும் விடாமல் வணங்குவேன்; எப்பொழுதும் வணங்கு வேன். இந்த நோய் கண்ணுக்குத் தெரியாது; என் வயிற்றில் பொறுக்க முடியாத வலி; குடலைப் பிடித்து கசக்குகிறது; இந்த வலியைத் தாங்க முடியவில்லை; கெடிலம் என்ற ஆற்றின் கரையில் உள்ளது திருவதிகை –அத்திருவதிகை என்ற தலத்தில் வீரட்டானம் என்ற கோயிலில் இருக்கும் தலைவனே!

கூற்று–யமன்; ஏறு–எருது; ஏற்றாய்–எருதை வாகனம் ஆக உடையவனே; தோற்றாது–தெரியாமல்; அகம்படி–உள்ளே; குடர்–குடல்; ஆற்றேன்–தாங்க மாட்டேன்; அடியேன்–நான்; அம்மான்–தலைவன்.

சலம் பூவொடு தூபம் மறந்து அறியேன்
தமிழோடு இசைபாடல் மறந்து அறியேன்
நலம் தீங்கிலும் உன்னை மறந்து அறியேன்
உன்னாமம் என்நாவில் மறந்து அறியேன்

உலந்தார் தலையில் பலிகொண்டு உழல்வாய்
உடலுள் உறுசூலை தவிர்த்து அருள்வாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

தண்ணீர், பூ, தூபம் இவற்றால் வழிபாடு செய்வதை மறந்தது இல்லை. இசை பொருந்திய தமிழ்ப் பாடல்களைப் பாடுவதையும் மறக்கவில்லை. நன்மை வந்த பொழுதும், தீமை வந்த பொழுதும் உன்னை மறக்கவில்லை. உன்னுடைய திருப்பெயர் (திருவைந்தெழுத்து); அதை என் நாக்கு மறக்கவில்லை. இறந்தவருடைய மண்டை ஓட்டில் பிச்சை எடுத்துத் திரிபவனே! என் உடம்புக்குள் வந்து இருக்கிற சூலைநோயை நீக்குவாயாக! வருந்துகிறேன். அடியவன் ஆகிய நான்; திரு அதிகையில் கெடில நதிக்கரையில் உள்ள 'வீரட்டானம்' என்ற கோயிலில் உள்ள கடவுளே!

சலம்–தண்ணீர்; மறந்து அறியேன்– மறந்ததில்லை; நலம்–நன்மைக்காலம்; தீங்கிலும்–தீமைக்காலத்திலும்; நா–நாக்கு; நாமம்–பெயர்; உலகத்தார்–இறந்தவர்; தலை–மண்டை ஓடு; பலி–பிச்சை; உழல்வாய்–திரிபவனே; உடல் உள்உறு–உடம்பில் வந்து இருக்கிற; தவிர்த்து அருள்வாய்–நீக்கி அருள்வாய்; அலந்தேன்–வருந்தினேன்.

போர்த்தாய் அங்கோர் ஆனையின் ஈருரிதோல்
புறங்கா(டு) அரங்கா நடமாட வல்லாய்
ஆர்த்தான் அரக்கன் தனைமால் வரைக்கீழ்
அடர்த்திட்(டு) அருள்செய்த அதுகருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கி இடாய்

ஆர்த்தூர் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்து உறை அம்மானே.

ஒரு யானையின் தோலை உரித்துப் போர்த்துக் கொண்டாய்; சுடுகாட்டையே நாடக அரங்காகக் கொண்டாய்; அங்கே நடனம் ஆடுகிறாய்; இராவணன் ஆகிய ராட்சசன் ஆரவாரம் செய்து மலையைத் தூக்கி னான்; அவனை நெருக்கி அவனுக்கு அருள் செய்தாய்; அதனை நினைவில் கொள்; நான் வேர்க்கிறேன்; புரள்கிறேன்; விழுகிறேன்; எழுகிறேன்; என் கஷ்டங்களை நீக்குவாய்; ஆரவாரம் செய்து கொண்டு கெடில நதியின் வெள்ளம் சூழ்ந்து இருக்கிற திருவதிகையில், வீரட்டாணம் என்ற கோயிலில் இருக்கும் இறைவனே!

ஆனை–யானை; புறங்காடு–சுடுகாடு; ஆர்த்தான்–ஆரவாரம் செய்தான்; அரக்கன்–இராட்சசன்; மால்–பெரிய; வரை–மலை; விலக்கி இடாய்–நீக்குவாய்; புனல்–நீர் (வெள்ளம்)

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படோம் நடலை இல்லோம்
ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாம் ஆர்க்கும் குடியல்லாத் தன்மை ஆன
சங்கரன் நல்சங்க வெண்குழை ஓர்காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்ம்மலர்ச் சேரடி இணையே குறுகினோமே.

நாம் யாருக்கும் குடிமக்கள் அல்லோம்; இயமனைக் கண்டு பயப்பட மாட்டோம்; நரகத்தில் (விழுந்து) துன்பம் அடைய மாட்டோம்; பொய் (எம் இடம்) இல்லை; களிப்பற்று இருப்போம்; நோய்கள்

அறிய மாட்டோம்; பணிய மாட்டோம்; இன்பமே, எந்த நாளிலும் — துன்பம் இல்லை.

தாம் எவருக்கும் குடிமகன் அல்லாத தன்மை உடையவன் சங்கரன்; நல்ல சங்கினால் ஆகிய வெண்மை நிறம் பொருந்திய குழையை ஒரு காதில் அணிந்துள்ள தலைவன்; அவனுக்கே நாம் எப்பொழுதும் மீண்டு வராத அடிமை ஆகினோம்; அவனுடைய மலர் போன்ற செம்மையான இரண்டு திருவடிகளையே அடைந்தோம்.

ஆர்க்கும்–யாருக்கும்; குடி–குடிமக்கள்; நமன்–யமன்; அஞ்சோம்–பயப்படமாட்டோம்; இடர்படோம்–துன்பப் படமாட்டோம்; பிணி–நோய்; கோமான்–அரசன்; குறுகினோம்–அடைந்தோம்.

நாவார நம்பனையே பாடப் பெற்றோம்
நாணற்றார் நள்ளாமே விள்ளப் பெற்றோம்
ஆவா என்று எமை ஆள்வான் அமரர் நாதன்
அயனொடு மாற்கு அறிவரிய அலையாய் நீண்ட
தேவாதி தேவன் சிவன் என் சிந்தை
சேர்ந்திருந்தான் தென்திசைகோன் தானே வந்து
கோவாடிக் குற்றேவல் செய்க என்றாலும்
குணமாகக் கொள்ளோம் என்குணத்(து) உளோமே.

நாக்கு விரும்பும் அளவு இறைவனைப் பாடினோம்; நாணம் இல்லாத சமணர் விரும்பாமல் நீங்கினார்கள். ஆஆ ·என்று எம்மை ஆள்பவன்-தேவர் களுக்குத் தலைவன்-பிரமனும் திருமாலும் அறிய முடியாதபடி நெருப்பாய் நின்றவன்–தேவர்களுக் கெல்லாம் முற்பட்ட தேவன்–சிவன்–அவன் என் மனத்தில் சேர்ந்து இருக்கிறான். இயமன் தானே வந்து, எம் தலைமையைக் கூறி, "உமக்கு ஏவல் செய்வேன்"

என்று கூறினாலும், அதனை நெறியாகக் கொள்ள மாட்டோம். நாம் சிவபெருமானது எண் குணங்களையும் உடையோம்.

நா—நாக்கு; நம்பன்—இறைவன்; நள்ளாமே—விரும்பாமல்; விள்ள—நீக்க; அமரர்நாதன்—தேவர்களுக்கு தேவன்; அயன்—பிரமன்; மால்—திருமால், விஷ்ணு; அனல்—நெருப்பு.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

குற்றம் அற்ற வீணையின் இசை போலவும், மாலைக் காலத்தில் காணப்படும் நிலாவைப் போலவும், அக்காலத்தில் வீசும் தென்றல் போலவும். இளவேனில் காலத்துக் குளிர்ச்சி போலவும், வண்டுகள் ஒலிக்கும் மலர்கள் உள்ள குளம் போலவும், இன்பம் உண்டாக்கும், எது எனில் எந்தை ஆகிய சிவபெருமானின் திருவடி நிழல்.

மாசுஇல்—குற்றம் இல்லாத; மதியம்—சந்திரன்; மூசு—மொய்த்தல்; அறை—ஒலிசெய்; பொய்கை—குளம்; எந்தை—என் தந்தை; இணையடி—இரண்டு திருவடி; நீழல்—நிழல்.

நமச்சிவாயவே ஞானமும் கல்வியும்
நமச்சிவாயவே நான் அறி விச்சையும்
நமச்சிவாயவே நா நவின்று ஏத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே

நமசிவாய என்பது பேரறிவைத் தருவது; கல்வியையும் தருவது; நமசிவாய என்பது நான் அறிந்த வித்தையும் ஆகும்; நமசிவாய என்பதை என்னுடைய

நாக்கு விரும்பிப் புகழும்; நமசிவாய என்பது நல்ல வழியைக் காட்டும்.

ஞானம் –பேரறிவு; அறி–அறிந்த; விச்சை–வித்தை; நா–நாக்கு; நவின்று–விரும்பி; ஏத்தும்–புகழும்; நன்னெறி–நல்லவழி;

விறகில் தீயினன் பாலில் படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முந் நிற்குமே.

விறகில் தீயைப் போலவும், பாலில் உள்ள நெய் போலவும், சிறந்த மணியில் காணப் பெறும் ஒளி போலவும் இறைவன் மறைந்து நின்று இருக்கிறான். உறவு என்னும் கோலை நட்டு, உணர்வு என்ற கயிறைக் கட்டி, முன்னும் பின்னும் இழுத்துக் கடைந்தால், இறைவன் எதிரில் வந்து நிற்பான்.

சோதி–ஒளி; உறவு–அறிவு;

திரு அதிகை வீரட்டானம்

சுண்ணவெண் சந்தனச் சாந்தும் சுடர்த்திங்கள் சூளா மணியும்
வண்ண உரிவை உடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரண் ஏறும் அகலம் வளாய அரவும்
திண்ணன் கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாது ஒன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை.

வெண்பொடி ஆகிய விபூதியைப் பூசுபவர்; சந்தனச் சாந்தை அணிபவர்; ஒளி பொருந்திய சந்திரனைத் தலை மணியாகச் சூடுபவர்; நிறம் உள்ள

தோலை ஆடையாக உடுப்பவர்; ஒளி வளர்கின்ற பவழம் போன்ற நிறம் உடையவர்; சிறப்பு உடையதும், அடியார்க்குக் காவல் ஆகவும், மற்றவர்க்கு மாறுபட்டும் இருக்கிற எருதை வாகனமாக உடையவர்; -அத்தகைய சிவனுக்கு நாம் உறவினர்; ஆகையால் நாம் பயப்படுவது எதுவும் இல்லை; நாம் பயம் அடையுமாறு வருவது எதுவும் இல்லை.

வெண் சுண்ணம்–வெண் பொடி; விபூதி; சுடர்–ஒளி; சூளாமணி–தலைமணி; வண்ணம்–நிறம்; உடை–ஆடை; உரிவை–தோல்; வளரும்–ஒளி வளர்கிற; அண்ணல்–தலைமை; அரண்–காவல்; முரண்–மாறுபாடு; ஏறு–எருது; அகலம்–மார்பு; வளாய–பரவிய; அரவு–பாம்பு; திண்–வலிமை; நன்–நல்ல; தமர்–உறவினர்; அஞ்சுவது–பயப்படுவது.

நரம்பு எழு கைகள் பிடித்து நங்கை நடுங்க மலையை
உரங்கள் எல்லாம் கொண்டு எடுத்தான் ஒன்பதும் ஒன்றும் அலற
வரங்கள் கொடுத்த அருள் செய்வான் வளர்பொழில் வீரட்டம் சூழ்ந்து
நிரம்பு கெடிலப் புனலும் உடையார் ஒருவர் தமர்நாம்
அஞ்சுவது யாது ஒன்றும் இல்லை அஞ்ச வருவதும் இல்லை.

இராவணன் வீணை நரம்புகளைத் தடவும் கைகளால் முழு வலிமையுடன் கயிலை மலையைத் தூக்கினான்; உமை நடுங்கினாள்; இறைவன் இராவணனது பத்து வாய்களும் அலறுமாறு செய்தார்; அவனுக்கு வரங்கள் கொடுத்து அருள் செய்தார்; வீரட்டம் தோட்டங்கள் வளர்ந்துள்ளது; கெடில நதியின் வெள்ளம் சூழ்ந்தது; இவ்வீரட்டத்து இறைவனுக்கு நாம் உறவினர்; ஆகையால் பயப்படுவது

எதுவும் இல்லை; நாம் பயம் அடையுமாறு வருவதும் எதுவும் இல்லை.

நரம்பு–வீணை நரம்பு; நங்கை–பெண்; நடுங்க–பயப்பட; உரம்–வலிமை; எடுத்தான்–தூக்கினான்;

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சி வாயவே.

புகழ் பொருந்திய வேதத்தை ஓதுபவன்; ஒளி பொருந்திய விண் உலகில் இருப்பவன்-இச்சிவ பெருமானுடைய திருவடிகள் பொன் போன்றவை; அழகானவை; அவற்றை மனம் பொருந்தக் கையால் தொழுதால், கல்தூணில் கட்டிக் கடலில் தள்ளினாலும், "நமசிவாய" என்னும் மந்திரம் நல்ல துணையாய் இருக்கும்.

சொல் துணை–புகழ் உடைய; வேதியன்–வேதம் ஓதுபவன்; சோதி–ஒளி; வானவன்–விண் உலகில் இருப்பவன்; பொன்துணை–பொன் போன்ற; திருந்து அடி–அழகிய திருவடி; தொழ–வணங்கினால்; கல்துணை–கல்தூண்; பூட்டி–கட்டி; பாய்ச்சினும்–தள்ளினாலும்.

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதியுள்ளது
பல்லக விளக்கது பலருங் காண்பது
நல்லக விளக்கது நமச்சி வாயவே.

வீட்டிலே வைக்கும் விளக்கு இருளை நீக்கும். புகழ் பொருந்திய மனத்தில் உள்ள விளக்கு ஒளி பொருந்தியது. பல வீடுகளிலும் வைக்கும் விளக்கு பலரும் காணக் கூடியது. நல்ல மனத்தில் இருப்பது ஆகிய விளக்கு "நமசிவாய" என்ற மந்திரம் ஆகும்.

இல்–வீடு; அகம்–உள்ளே; இருள்–இருட்டு; கெடுப்பது–நீக்குவது; அகம்–மனம்; சோதி–ஒளி;

மாப்பிணை தழுவிய மதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே.

பெண்மான் போன்றவர் உமை; அவரை ஒரு பாகத்தில் உடையவர் சிவபெருமான்; சிவபெருமானுடைய திருவடிகள் மலர் போன்றவை; அழகு உடையவை; அவற்றைக் கையால் தொழு; சொல் மாலையாகிய நமசிவாயப் பதிகத்தைப் பாடு; பாடினால் துன்பங்கள் இல்லை.

மாப்பிணை–பெண் மான்; மாது–பெண் (உமை) பாகத்தன்–பாகத்தில் உடையவன்; பூப்பிணை–மலர் போன்ற; நாப்பிணை–சொல்மாலை; பிணை–மாலை; பத்து–பத்துப் பாடல்கள் உள்ள பதிகம்; ஏத்த வல்லார்–புகழ் பாடுபவர்; இடுக்கண்–துன்பம்;

திருப்பெண்ணாகடம்

பொன்னார் திருவடிக்கு ஒன்று உண்டு விண்ணப்பம்
என்னாவி காப்பதற்கு இச்சை உண்டேல் இருங்
கூற்று அகல
மின்னாரு மூவிலைச் சூலம்என் மேற்பொறி மேவு
கொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடர்க்
கொழுந்தே.

பொன் போன்ற உன் திருவடிக்கு விண்ணப்பம் செய்து கொள்வது ஒன்று இருக்கிறது. வணக்கம் செலுத்துகிற என் உயிரைக் காப்பதற்கு உனக்கு விருப்பம் இருப்பின், பெரிய இயமன் நீங்கும்படி, ஒளி

பொருந்திய மூன்று இலைகளையுடைய சூலத்தை என்மேல் பொறி! மேகம் தவழ்கிறதும், யானை புகுவதற்கு அரியதும் ஆன பெண்ணாகடத்தில் உள்ள, தூங்கானை மாடம் என்னும் கோயிலில் இருக்கும் சுடர்க்கொழுந்து என்ற கடவுளே.

பொன் ஆர் திருவடி–பொன் போன்ற திருவடி; விண்ணப்பம் –வேண்டுகோள்; ஆவி–உயிர்; இச்சை–விருப்பம்; இரும்கூற்று–பெரிய இயமன்; மின் ஆரும்–ஒளி பொருந்திய; கொண்டல்–மேகம்; கடந்தை–பெண்ணாகடம்;

கடவுந் திகிரி கடவாது ஒழியக் கயிலை யுற்றான்
படவுந் திருவிரல் ஒன்றுவைத் தாய்பனி மால்
வரைபோல்
இடவம் பொறித்து என்னை ஏன்றுகொள்வாய் இருஞ்
சோலை திங்கள்
தடவுங் கடந்தையுள் தூங்கானை மாடத்து எம்
தத்துவனே.

செலுத்தும் தேர் செல்லாது நின்றது; இராவணன் கயிலையைப் பெயர்த்தான்; பெயர்க்கவும் நீ உன் திருவிரல் ஒன்றை ஊன்றிய பெருமானே! பனி பொருந்திய பெரிய மலை போன்ற இடபக்குறியைப் பொருத்தி என்னை ஏற்றுக் கொள்வாய். சந்திரன் செழித்த சோலையைத் தவழ்ந்து செல்லும், பெண்ணாகடத்தில் உள்ள, தூங்கானை மாடம் என்னும் கோயிலில் உள்ள மெய்ப்பொருளே!

கடவும்–செலுத்தும்; திகிரி–சக்கரம்–தேர்; கயிலை–திருக் கயிலாயமலை; மால்–பெரிய; வரை–மலை; பனிமால் வரை–இமயமலை; இடவம்–இடபம்; ஏன்று கொள்வாய்–ஏற்றுக் கொள்வாய்; திங்கள்–சந்திரன்; தடவும்–தவழும்; தத்துவம்–மெய்ப்பொருள்;

கோயில் (சிதம்பரம்)

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகீ
எத்தினால் பத்தி செய்கேன் என்னை நீ இகழ வேண்டா
முத்தனே முதல்வா தில்லை அம்பலத்(து) ஆடுகின்ற
அத்தாவுன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே.

பக்தி உடையவனாய் உன்னைப் பாடாமல் இருக்கிறேன்! மேலானவனே! மேன்மையான யோகியே! எந்த விதமாக நான் பக்தி செய்வேன்? என்னை நீ இகழ வேண்டாம். முத்தியைத் தருபவனே! எல்லாருக்கும் முதல் ஆக இருப்பவனே! தில்லையில் உள்ள நடன சாலையில் நடனம் ஆடுகிறவனே! உன் திரு நடனத்தைக் காண அடியேன் வந்து இருக்கிறேன்.

பக்தன் – பக்திசெய்பவன்; பரமன் – மேலானவன்; எத்தினால் – எந்தவிதமாக; செய்கேன்– செய்வேன்; முத்தன் – முக்தி கொடுப்பவன்; தில்லை – சிதம்பரம்; அம்பலம் – நடனசாலை;

மண்ணுண்ட மாலவனும் மலர்மிசை மன்னினானும்
விண்ணுண்ட திருவுருவம் விரும்பினார் காணமாட்டார்
திண்ணுண்ட திருவே மிக்க தில்லைச் சிற்றம்பலத்தே
பண்ணுண்ட பாடலோடும் பரமநீ ஆடுமாறே.

வானம் வரையிலும் ஓங்கி வளர்ந்த உருவம் எடுத்தார் சிவபெருமான். உலகம் உண்ட திருமாலும் தாமரையில் உள்ள பிரமனும் தேடிக் காண விரும்பினர். ஆனால் காண முடியவில்லை. அழிவில்லாத செல்வமே! பரமனே? தில்லையில், சிற்றம்பலத்தில் பண் பொருந்திய பாடல்களைப் பாடிக் கொண்டு ஆடுகிறாய்? (இஃது என்ன அதிசயம்)

மண் – உலகம்; உண்ட – தின்ற; மாலவன் – திருமால்; மலர் – தாமரை மலர்; மிசை – மேல்; மன்னினான் – இருந்தான்; திண் – வலிமை; திரு – செல்வம்; தில்லை – சிதம்பரம்; பண் – இசை;

தில்லைச் சிற்றம்பலம்

அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்
பொன்னம் பாலிக்கும் மேலும் இப் பூமிசை
என் அன்பு ஆலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே.

உணவைக் கொடுக்கும் சிதம்பரத்தில் உள்ள திருச்சிற்றம்பலத்தில் உள்ள இறைவன்; மேலும் பொன்னையும் அளிக்கும் இந்த உலகத்தில், என் அன்பு பொருந்தி உள்ள நிலைமையைப் பார்த்து, நான் இன்பம் அடைய, இன்னமும் இந்த மானிடப் பிறவி வருமோ?

அன்னம் – சோறு – உணவு; பாலிக்கும் – கொடுக்கும்; இன்னம் – இனியும்; பிறவி – பிறப்பு.

அல்லல் என்செயும் அருவினை என்செயும்
தொல்லை வல்வினைத் தொந்தந்தான் என் செயும்
தில்லை மாநகர் சிற்றம் பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே.

ஆகாமியம் ஆகிய அல்லல் என்னை என்ன செய்யும்? பிரார்த்த வினை என்ன செய்யும்? பழைய வல்வினையாகிய சஞ்சிதம் எனும் துவந்தவம் என்ன செய்யும்? தில்லையாகிய பெரிய நகரில் திருச்சிற்றம் பலத்தில் உள்ள இறைவனுக்கு அளவு இல்லாத அடிமை பூண்டு இருக்கிற எனக்கு?

அல்லல் – ஆகாமியம் – இப்பிறப்பி.ல் செய்யும் புண்ணிய பாவங்கள்; அருவினை – பிரார்த்தம் – இப்பிறவியில் பயன் அளிக்கும் பழவினை – தொல்லை – பழைமையான; வல்வினை – வலிமை பொருந்திய வினை; தொந்தம் – துவந்துவம் – இருவினை – சஞ்சிதம் – அனாதியாய் ஈட்டப்பட்டு உள்ள கருமத்தில் அனுபவித்துத் தீர்ந்தது போக மீதி இருப்பது. மாநகர் – பெரிய நகரம்; எல்லை – அளவு

பொது விடம் தீர்த்த திருப்பதிகம்

ஒன்றுகொலாம் அவர் சிந்தை உயர்வரை
ஒன்றுகொ லாம்உய ரும்மதி சூடுவர்
ஒன்றுகொ லாம்இடு வெண்தலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே.

சிவபெருமான் இருப்பது சிந்தைக்கு எட்டாத உயர்ந்த கயிலைமலை ஒன்று; அவர் சூடிக் கொள்வது வளரும் பிறை ஆகிய ஒன்று; அவர் கையில் இருப்பது பிச்சை இடும்படியான (பிரமனது) கபாலம் ஆகிய ஒன்று; அவர் ஊர்வது எருது ஆகிய ஒன்று.

அவர் – சிவபெருமான்; சிந்தை – மனம்; உயர்வரை – உயர்ந்த மலை; உயரும் மதி – வளர்கிற சந்திரன்; சூடுவர் – அணிவர்; கையது – கையில்; வெண்டல் – (பிரமனது) கபாலம்; ஊர்வது – ஏறுவது.

பத்துகொ லாம்அவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துகொ லாம்எயி றுந்நெரிந் துக்கன
பத்துக்கொ லாம்அவர் காயப்பட்டான் தலை
பத்துக்கொ லாம்அடி யார்செய்கை தானே.

அவர் சூடிய பாம்பின் கண் பத்து; பாம்பின் பல் பத்து; பாம்பின் பல் பத்தும் நெரிந்து உடைந்தன; அவரால் காயம் அடைந்த இராவணனது தலை பத்து; அடியார்களுடைய செய்கைகளும் (ஆன்ம அனுபவங்களும்) பத்து.

எயிறு – பல்; நெரிந்து உக்கன – உடைந்து துண்டாயின; அடியார் – பக்தர்.

திருவாரூர்

கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
    கழல் அடைந்தார் செல்லும் கதியே போற்றி
அவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
    அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
    வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரம் எரித்த சிவனே போற்றி
    திருமூலட்டானனே போற்றி போற்றி.

கற்றவர்கள் உண்ணும் பழமே போற்றி! உன் திருவடியை அடைந்தவர் அடையும் மோட்சமாக இருப்பவனே போற்றி! பற்று அற்றவர்களுக்கு அமுதம் ஆனவனே போற்றி! இரு வினைகளை அறுத்து என்னை ஆண்டு கொண்டவனே போற்றி! வேறு ஒருவரும் ஒப்பு இல்லாதவனே போற்றி! தேவர்கள் போற்றும் அமுதம் ஆகியவனே போற்றி! பகைவர்களுடைய முப்புரங் களையும் எரித்த சிவனே போற்றி! திருவாரூரில் திருமூலட்டானத்து எழுந்தருளியுள்ள இறைவனே போற்றி!

கற்றவர்கள் – படித்தவர்கள்; கனி – பழம்; கழல் – வீரக்கழல் – திருவடி; கதி – முத்தி; அற்றவர் – இல்லாதவர்; அறுத்து – நீக்கி; ஒப்பு இல்லா – சமம் இல்லாத; மருந்து – அமிர்தம்; செற்றவர் – பகைவர்; திருமூலட்டானன் – திருவாரூர்க் கோயில் கருவறையில் இருக்கும் இறைவன்.

பிரமன் தன் சிரம் அரிந்த பெரியோய் போற்றி
    பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி

கரம் நான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்று அரக்கன் ஐந்நான்கு தோளும் தாளும்
சிரம் நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி.

பிரமனது தலையை அறுத்த பெரியோனே போற்றி! பெண்ணுருவத்தோடு ஆண் உருவத்தையும் கொண்டு இருப்பவனே, போற்றி! நான்கு திருக்கை களையும், மூன்று கண்களையும் உடையவனே போற்றி! உன்னை விரும்புபவர்களுக்கு மிகவும் எளிமையாக இருப்பவனே போற்றி! அரிய மருந்துடைய தேவர்கட்கு அரசே போற்றி!

முன்னாளில் இராவணனின் இருபது தோள் களையும், கால்களையும், பத்து தலைகளையும் நெரித்த திருவடி உடையவனே, போற்றி! போற்றி! திருவாரூரில் திருமூலட்டானத்தில் எழுந்தருளியுள்ள இறைவனே; போற்றி! போற்றி!

சிரம் – தலை; பெரியோய் – பெரியோனே; கரம் – கை; முக்கண் – மூன்று கண்; காதலிப்பார்க்கு – விரும்புவார்க்கு; ஆற்ற – மிகவும்; எளியாய் – எளியோனே; அருமந்த – அருமையான அமுதம் உடைய; தாள் – அடி; சேவடி – திருவடி;

திருமறைக்காடு

பண்ணின் நேர் மொழியாள் உமை பங்கரோ
மண்ணினார் வலம் செய்ம்மறைக் காடரோ
கண்ணினால் உமைக் காணக் கதவினைத்
திண்ணமாகத் திறந்து அருள் செய்ம்மினே.

இசைபோல இனிமையான மொழிகளைப் பேசுபவர் உமாதேவி; அவரை ஒரு பங்கில் கொண்டு இருப்பவரே! இந்த மண் உலகத்தில் வாழ்கிற மக்கள் வலம் வருகிற திருமறைக் காட்டில் இருப்பவரே! இந்தக் கண்ணால் உம்மைப் பார்க்க வேண்டும்; அதற்காக இந்தக் கதவுகளைத் திறந்து அருள் செய்ய வேண்டும்.

பண் – இசை; நேர் – போன்ற; பங்கர் – பாகத்தில் உடையவர்; மண்ணினார் – மக்கள்; வலம் செய் – சுற்றுகிற; செய்ம்மின் – செய்ய வேண்டும்.

அரக்கனை விரலால் அடர்த்திட்ட நீர்,
இரக்கம் ஒன்றுஇலீர் எம்பெருமானாரே
சுரக்கும் புன்னைகள் சூழ் மறைக்காடரோ
சரக்க இக்கதவம் திறப் பிம்மினே.

அரக்கன் ஆகிய இராவணனைக் கால் விரலால் அடக்கி வருத்தம் செய்தீர்; உமக்கு இரக்கம் சிறிதும் இல்லையா? எம் தலைவனே? புன்னை மரங்கள் வளர்கிற திருமறைக் காட்டில் இருப்பவரே! வேகமாக இக்கதவுகளைத் திறக்கச் செய்வீர்.

அரக்கன் – ராட்சசன்; விரல் – கால்விரல்; அடர்த்திட்ட – அடக்கிய; சுரக்கும் – வளர்கின்ற; புன்னை – ஒருவகை மரம்; சரக்க – வேகம் ஆக; திறப்பிம்மினே – திறக்கச் செய்வீர்.

திருவையாறு

மாதர்பிறைக் கண்ணியானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந்(து) ஏத்திப் புகுவார் அவர்பின் புகுவேன்

யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்ற போது
காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன
கண்டேன்.

அழகிய பிறைச்சந்திரனைத் தலைமாலையாக அணிந்தவர் சிவபெருமான்; உமாதேவி இமவான் மகள் ஆவார்; அச்சிவனை உமையோடு சிலர் பாடிச் செல்கிறார்கள்; அவர்கள் பூவோடு நீரை எடுத்துக் கொண்டும் துதித்துக் கொண்டும் போகிறார்கள். அவர்களுடன் நானும் கோயிலுக்குள் போவேன். அப்படிப்பட்ட நான், கால் சிறிதும் நிலத்தின் மேல் படாமல் திருவையாறு என்ற தலத்தை அடைந்தேன்; அப்பொழுது அன்பு பொருந்திய இளம் பெண் யானை வந்து கொண்டு இருந்தது. அதனுடைய ஆண் யானையும் வருவதைப் பார்த்தேன்; அக்காட்சியில் சிவபெருமானின் திருவடிகளைப் பார்த்தேன். எப்பொழுதும் பார்த்து அறிய முடியாத காட்சிகளை எல்லாம் பார்த்தேன்.

மாதர் – அழகு; பிறை – சந்திரன்; கண்ணி – தலைமாலை; மலையான் – மலையரசன்; போது – மலர்; புகுவார் – செல்வார்; சுவடு – கால்; படாமல் – நிலத்தின் மேல் படாமல்; காதல் – அன்பு; மடப்பிடி – பெண் யானை

வான்மதிக் கண்ணியினானை வார்குழலாளோடும்
பாடிக்
களவு படாததோர் காலம் காண்பான் கடைக்கண்
நிற்கின்றேன்
அளவு படாததோர் அன்போடு ஐயாறு அடைகின்ற
போது

இளமண நாகுதழுவி ஏறு வருவன கண்டேன்
கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன
கண்டேன்.

இறைவன், வள்ர்கிற பிறையைத் தலையில் சூடி இருக்கிறான்; அவ்விறைவனை நீண்ட கூந்தல் உடைய உமையோடே பாடினேன். காலத்தை வீண் செய்யாமல் அவர்களைக் காண்பதற்கு வாயிலில் நிற்கிறேன். அளவு இல்லாத அன்புடன் திருவையாறு என்ற தலத்தை அடைந்தேன்; அப்பொழுது இளமையான பசுவைத் தழுவி எருது வருவதைக் கண்டேன். அக்காட்சியில் சிவபெருமானின் திருவடிகளைக் கண்டேன். எப்பொழுதும் பார்த்து அறிய முடியாத காட்சிகளை எல்லாம் பார்த்தேன்.

வளர்மதி – வளரும் சந்திரன்; வளர்குழல் – நீண்ட கூந்தல்; களவு படாத – வீணாக்கப் படாத; அளவுபடாத – அளவிட முடியாத; இளமணநாகு – இளம்பசு; ஏறு – காளை;

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி

ஓசையாகவும், ஒலியாகவும் இருப்பவன் நீயே; உலகம் முழுவதுக்கும் ஒப்பு இல்லாதவனாக நிற்பவன் நீயே; வாசனை பொருந்திய மலர் முழுவதும் நிற்பவன் நீயே; இமவானுக்கு மருமகனாய் நிற்பவனும் நீயே;

பேசுவதற்கு மிகவும் இனிமை உடையவன் நீயே; தலைவன் ஆகித் திருவடியை என் தலைமேல் வைத்தவனும் நீயே; உலகம் முழுவதுக்கும் விளக்காக இருப்பவனும் நீயே; திருவையாற்றை நீங்காது இருக்கும் சிவந்த பொன் போன்ற ஒளி உடைய கடவுளே!

எலாம் – எல்லாம்; ஒருவன் – ஒப்பு இல்லாதவன்; வாசம் – வாசனை; மருகன் – மருமகன்; இனியாய் – இனிமை உடையவன்; பிரான் – தலைவன்; தேசம் – உலகம்; அகலாத – நீங்காத; செம்பொன் – சிவந்த பொன்; சோதி ஒளி;

ஆரும் அறியா இடத்தாய் நீயே
ஆகாயம் தேர் ஊர வல்லாய் நீயே
பேரும் பெரிய இலங்கை வேந்தன்
பெரிய முடிபத்து இறுத்தாய் நீயே
ஊரும் புரமூன்றும் அட்டாய் நீயே
ஒண் தாமரையானும் மாலும் கூடித்
தேரும்அடி என்மேல் வைத்தாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற்சோதி.

ஒருவரும் அறிந்து கொள்ள முடியாத இடத்தில் இருப்பவன் நீயே; ஆகாயத்தில் தேரில் செல்லக் கூடியவன் நீயே; புகழ் பொருந்திய பெரிய இலங்கைக்கு அரசன் இராவணன்; அவன் தலைகள் பத்தையும் நெரித்தவனும் நீயே; நகரும்படியான மூன்று ஊர்களையும் அழித்தவனும் நீயே; ஒளி பொருந்திய தாமரையில் இருக்கும் பிரமனும், திருமாலும் கூடித் தேடிய திருவடியை என் தலைமேலே வைத்தவனும் நீயே; திருவையாற்றில் நீங்காமல் இருக்கும் செம்பொன் போன்ற ஒளி பொருந்திய க்டவுளே?

ஆரும் – ஒருவரும்; இடத்தாய் – இடத்தில் இருப்பவனே; ஆகாயம் – வானம்; பேர் – புகழ்; முடி – தலை; இறுத்தாய் –

நெரித்தவன்; ஊரும்புரம் – நகர்கிற ஊர்; சுட்டாய் – அழித்தாய்; ஒண் – ஒளி பொருந்திய; தாமரையான் – தாமரையில் உள்ள பிரமன்; தேரும் – தேருகிற.

திரு அங்கமாலை

தலையே நீ வணங்காய் – தலை
மாலை தலைக்கு அணிந்து
தலையாலே பலிதேருந் தலைவனைத்
தலையே நீ வணங்காய்.

தலையே நீ வணக்கம் செலுத்து; தலை மாலையைத் தலையில் அணிந்து கொண்டிருக்கிறான், சிவன்; அவன் (பிரமனது) தலை ஓட்டில் பிச்சை எடுக்கிறான்; அத் தலைவனைத் தலையே! நீ வணங்குவாய் ஆக!

வணங்காய் – வணங்கு; தலையாலே – பிரமனது தலையாலே; தலைமாலை – மண்டை ஓட்டினால் ஆன மாலை.

கண்காள் காண்மின்களோ – கடல்
நஞ்சுண்ட கண்டன் தன்னை
எண்தோள் வீசிநின்றாடும் பிரான் தன்னைக்
கண்காள் காண்மின்களோ.

கண்களே! பாருங்கள்! சிவன் கடலில் இருந்து வந்த விஷத்தை உண்டு கழுத்தில் நிறுத்தினான்; அவன் தன் தோள் எட்டையும் வீசி ஆடுகிறான். அத்தகைய கடவுளைக் கண்களே. பாருங்கள்.

காண்மின்கள் – பாருங்கள்; நஞ்சு – விஷம்; கண்டம் – தொண்டை; எண்தோள் – எட்டுத் தோள்கள்.

செவிகாள் கேண்மின்களோ – சிவன்
எம் இறை செம்பவள

**எரிபோன் மேனிப் பிரான்தோறும் எப்போதும்
செவிகாள் கேண்மின்களோ.**

காதுகளே! கேளுங்கள்! சிவன் எங்கள் தலைவன்; சிவந்த பவழ நிறம் உடையவன்; நெருப்பு போன்ற உடம்பு உடையவன்! அவனுடைய பெருமையைக் காதுகளே! எப்பொழுதும் கேளுங்கள்.

செவிகாள் – ஓ! காதுகளே! கேண்மின்கள் – கேளுங்கள்; இறை – தலைவன்; செம்பவளம் – சிவந்த பவளம்; எரி – நெருப்பு; மேனி – உடம்பு; திறம் – பெருமை;

**மூக்கே நீ முரலாய் – முது
காடுறை முக்கணனை
வாக்கே நோக்கிய மங்கை மணாளனை
மூக்கே நீ முரலாய்.**

மூக்கே! நீ முகர்ந்து பார்! சிவன் முதுகாட்டை இடம் ஆக உள்ளவன்; மூன்று கண்களை உடையவன் உமையின் பேச்சையே எதிர் நோக்கி இருக்கும் தலைவன்; அவனை, மூக்கே! நீ நுகர்வாயாக.

முரலாய் – முகர்ந்து பார்; முது காடு – சுடு காடு; முக்கணன் – சிவன்; வாக்கு – சொல்; மணாளன் – கணவன்; மங்கை – பெண்.

**வாயே வாழ்த்து கண்டாய் – மத
யானை யுரி போர்த்துப்
பேய்வாழ் காட்டகத்து ஆடும் பிரான்தன்னை
வாயே வாழ்த்து கண்டாய்.**

வாயே! நீ வாழ்த்துவாயாக! இவன் மதம் பொருந்திய யானையின் தோலை உரித்தவன். பேய்கள் இருக்கும்படியான சுடுகாட்டில் ஆடுபவன். அத்தலைவனை, வாயே! நீ வாழ்த்துவாயாக!

காடு – சுடுகாடு; பிரான் – தலைவன்

நெஞ்சே நீ நினையாய் – நிமிர்
புன்சடை நின்மலனை
மஞ்சாடும்மலை மங்கை மணாளனை
நெஞ்சே நீ நினையாய்.

நெஞ்சே! நீ நினைப்பாய் ஆக! சிவன் நீண்ட சடை உடையவன்; தூய்மை உடையவன்; பனி மூடியுள்ள மலை அரசன் மகளுக்குக் கணவன். அச் சிவனை நெஞ்சே! நீ நினை!

நெஞ்சு – மனம்; நிமிர்சடை – நீண்டசடை; நின்மலன் – தூய்மையானவன்; மஞ்சு – வெண்மேகம்; மலைமங்கை – மலையரசனின் மகள்; மணாளன் – கணவன்.

கைகாள் கூப்பித் தொழீர் – கடி
மாமலர் தூவி நின்று
பைவாய்ப் பாம்பரை ஆர்த்த பரமனைக்
கைகாள் கூப்பித் தொழீர்.

கைகளே! இரண்டு கைகளையும் சேர்த்துத் தொழுங்கள். வாசனை உள்ள சிறந்த மலர்களை இட்டு நின்று தொழுங்கள். இறைவன், படம் உடைய பாம்பை இடுப்பில் கட்டியவன். அவனைக் கைகளே கூப்பித் தொழுங்கள்.

கூப்பி – சேர்த்து; கடி – வாசனை; தூவி – இட்டு; பை – படம்; அரை – இடுப்பு; ஆர்த்த – கட்டிய; பரமன் – சிவபெருமான்.

ஆக்கையால் பயன் என் – அரன்
கோயில் வலம் வந்து
பூக்கையால் அட்டிப் போற்றி யென்னாதஇவ்
ஆக்கையால் பயன் என்.

உடம்பால் பயன் என்ன? சிவபெருமான் கோயிலை வலம் வர வேண்டும்; பூவைக் கையில் எடுத்துக் கொண்டு 'போற்றி' என்று சொல்லிப் போட வேண்டும். இப்படிச் செய்யாத இந்த உடம்பால் பயன் என்ன?

ஆக்கை – உடம்பு; என் – என்ன? அரன் – இறைவன்; வலம் வந்து – சுற்றி;

கால்களால் பயன் என் – கறைக்
கண்டன் உறை கோயில்
கோலக் கோபுரக் கோகரணஞ் சூழாக்
கால்களால் பயன் என்.

கால்கள் இருப்பதால் பயன் என்ன? கழுத்தில் கறை உடையவன் சிவபெருமான். அப்பெருமான் இருக்கும் கோயில் திருக்கோகரணம். அங்கு அழகிய கோபுரம் இருக்கிறது. அக்கோயிலைச் சுற்றி வராத கால்களால் பயன் என்ன?

கறைக் கண்டன் – கறை உடையவன்; கோலம் – அழகு; சூழா – சுற்றாத

உற்றார் ஆர் உளரோ – உயிர்
கொண்டு போம் பொழுது
குற்றாலத்து உறை கூத்தன் அல்லால் நமக்கு
உற்றார் ஆர் உளரோ.

யமன் உயிரைக் கொண்டு போகிற சமயத்தில், உறவினராக நமக்கு யார் இருக்கின்றார்கள்? குற்றாலம் என்னும் தலத்தில் கூத்து ஆடும் கடவுளைத் தவிர்த்து நமக்கு உறவினர் ஆக யார் இருக்கின்றார்கள்?

உற்றார் – உறவினர்; பொழுது – நேரத்தில்; உறை – இருக்கும்; கூத்தன் – நடமாடுபவன்; அல்லால் – தவிர.

இறுமாந்து இருப்பன் கொலோ–ஈசன்
பல்கணத்து எண்ணப்பட்டுச்
சிறுமான் ஏந்திதன் சேவடிக்கீழ்ச் சென்று அங்கு
இறுமாந்து இருப்பன் கொலோ.

சிவபெருமானின் அடியார்களில் நான் ஒருவன் என்று நான் மிகவும் இருமாந்து இருப்பேனோ? சிறிய மானைக் கையில் கொண்டு இருக்கிறான், இறைவன்; அவனுடைய திருவடி செம்மையானது; அதன் கீழே சென்று, நான் மிகவும் சிறப்பாக இருப்பேனோ?

இறுமாந்து – செம்மாந்து – சிறந்து; பல் கணம் – பல அடியார்கள்; சேவடி – திருவடி.

தேடிக் கண்டு கொண்டேன் – திரு
மாலொடு நான்முகனும்
தேடித் தேட ஒணாத் தேவனை என் உள்ளே
தேடிக் கண்டு கொண்டேன்.

தேடிக் கண்டு பிடித்துவிட்டேன். திருமாலும் பிரமனும் தேடினார்கள்; தேடினாலும் காண முடியாதவன் சிவன். அச்சிவனை என் மனத்தில் தேடிக் கண்டு பிடித்து விட்டேன்.

திருமால் – விஷ்ணு; நான்முகன் – பிரமன்; ஒணா – முடியாத; உளே – மனத்தில்.

திருப்புகலூர்

எண்ணுகேன் என்சொல்லி எண்ணுகேனோ
எம்பெருமான் திருவடியே எண்ணின் அல்லால்

கண்ணிலேன் மற்றோர் களைகண் இல்லேன்
கழல் அடியே கைதொழுது காணின் அல்லால்
ஒண்ணுளே ஒன்பது வாசல் வைத்தாய்
ஒக்க அடைக்கும் போது உணரமாட்டேன்
புண்ணியா உன் அடிக்கே போது கின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

நான் நினைக்கும் தன்மை உடையேன்; நான் என்ன சொல்லி நினைப்பேன்? சிவபெருமான் ஆகிய உன் திருவடி அல்லாமல் வேறு எதையும் நான் நினைப்பது இல்லை; நான் வேறு எதையும் காண்பது இல்லை; எனக்கு வேறு ஒருவரும் உதவி இல்லை; கழல் அணிந்த உன் திருவடியைத் தவிர்த்து வேறு எதையும் காண்பதில்லை. இந்த ஓர் உடம்புக்குள் ஒன்பது வழிகளை வைத்திருக்கிறாய். அவை ஒரே சமயத்தில் மூடிக் கொள்ளும். அப்பொழுது எதையும் அறிய முடியாது. புண்ணியமே உருவாக உள்ளவனே! உன் திருவடியை நோக்கிச் செல்கிறேன். அழகிய திருப்புகலூர் என்ற தலத்தில் உள்ள இறைவனே!

எண்ணுகேன் – நினைப்பேன்; என் – என்ன? அல்லால் – தவிர; கண் இலேன் – பார்ப்பதில்லை; மற்று – வேறு; களைகண் – உதவி; கழல் – திருவடி; ஒன்பது வாசல் – ஒன்பது வழி; ஒக்க – ஒருசேர; போதுகின்றேன் – செல்கிறேன்;

ஒருவனையும் அல்லாது உணராது உள்ளம்
உணர்ச்சித் தடுமாற்றத்து உள்ளே நின்ற
இருவரையும் மூவரையும் என்மேல் ஏவி
இல்லாத தரவு அறுத்தாய்க்கு இல்லேன் ஏலக்
கருவரை சூழ் கானல் இலங்கை வேந்தன்
கடுந்தேர் மீது ஓடாமைக் காலாற் செற்ற

பொரு வரையாய் உன் அடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே.

உன்னைத் தவிர வேறு ஒருவரையும் என் மனம் நினைக்காது. என் உணர்ச்சி தடுமாறி இருக்கிற நேரம்; அப்பொழுது நீ என் மேல் என் உள் இருந்த இருவரையும் ஏவினாய்; மூவரையும் ஏவினாய்; என்னிடம் உள்ள செறுக்கை இல்லாதபடி அறுத்தாய்; நறுமணம் பொருந்திய பெரிய மலைகளையும் சோலைகளையும் உடையது இலங்கை. அந்த இலங்கைக்கு அரசன் இராவணன். வேகமாகச் செல்லும் அவனுடைய தேர் ஓடவில்லை. தடுத்த மலையைத் தூக்கினான். அங்ஙனம் தூக்கிய இராவணனைக் கால் விரலால் இறைவன் அழுத்தித் துன்பப்படுத்தினான்; அப்படிப்பட்ட வலிமை பொருந்திய மலையில் இருப்பவனே? உன் திருவடியை நோக்கிச் செல்கிறேன்; அழகிய திருப்புகலூரில் உள்ள இறைவனே!

உள்ளம் – மனம்; இருவர் – நல்வினை, தீவினை; மூவர் – முக்குணம் சாத்வி, ராட்சச, தாமச குணங்கள்; ஏவி – செலுத்தி; தரவு – செறுக்கு; ஏலம் – நறுமணம்; கருவரை – பெரிய மலை; கானல் – சோலை; வேந்தன் – அரசன்; கடும் – வேகம்; வரை – மலை; பொரு – வலிமை.

திருச்சிற்றம்பலம்